விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பன்னிரண்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 12 வியாழக்கிழமை (25.04.2002) தொலைபேசி 3378 ஒலி 127




## சமாதானத்தைக் குழப்பியடிக்கும்
# எதிர்க்கட்சிகளின் பேரணிக்கு
# தமிழ்க் கூட்டமைப்புக் கண்டனம்

(நமது நிருபர்)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராகவும், அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி யும் இணைந்து வகுப்பு வாத சக்திகளுடன் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகள் கண்டித்துள்ளன.**

அரசும், விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் கொழும்பில், ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் எதிர்ப்புக் கூட்டத்தையும் நடத்தியிருந்தன.

எதிர்க் கட்சிகளின் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தமிழ்க் கட்சி தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் எம்பியுமான எம். சிவசிதம்பரம் எதிரணியினரின் எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

ஆண்டாண்டு காலமாக சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் போதெல்லாம் சிங்களப் பேரினவாத சக்திகள் அதனைக் குழப்பி வந்துள்ளன. அந்தச் செயலையே அவர்கள் இப்போதும் தொடர்கிறார்கள்.

யுத்த முனைக்குச் சென்று போரில் கலந்து கொள்ளாது கொழும்பில் சொகுசு வாழ்க்கை நடத்திக் கொண்டு

(2ம் பக்கம் பார்க்க)

### முகமாலை சோதனைச் சாவடி நாளை மூடப்பட்டிருக்கும்

போயா தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை முகமாலையில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடி நிலையம் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.(ந)

### விபத்தில் சிறுவன் பலி

(மந்திகை)

வானும்- சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் அமர்ந்து வந்த 4 வயதுச் சிறுவன் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தான். சிறுவனை சைக்கிளில்

(2ம் பக்கம் பார்க்க)

## ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று லண்டன் பயணம்

(வவுனியா)

வன்னியில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் ஆன்ரன் பாலசிங்கம் நேற்று இலண்டன் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் இடம் பெறவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தலைவர் பிரபாகரனுடன் அந்தரங்க ஆலோசனை நடத்தும் பொருட்டு கடந்த மாதம் 25ம் திகதி மாலைதீவில் இருந்து கடல் விமானம் மூலம் அன்ரன் பாலசிங்கமும் அவரது மனைவி அடேல் பாலசிங்கமும், கிளிநொச்சியிலுள்ள இரணைமடுக் குளத்தில் வந்திறங்கியிருந்தனர்.

அன்ரன் பாலசிங்கம் வன்னிக்குச் செல்வதற்கு மாலை தீவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் வழங்கப்பட்ட ஒரு மாதகால விசா

(12ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் ஜனாதிபதி சந்திரிகா சந்திப்பு

### குடியரசுத் தலைவரையும் சந்தித்தார்

(புதுடில்லி)

ஒரு வார கால உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயையும், குடியரசுத்தலைவர் கே.ஆர்.நராயணனையும் நேற்றுச் சந்திப் பேசியுள்ளார்.

முன்னதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு குடியரசு மாளிகையில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

பிரதமர் வாஜ்பாயையும் குடியரசுத் தலைவர் கே. ஆர்.நாராயணனையும் சந்தித்த ஜனாதிபதி இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சி தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுடன் அரசு செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டை எடுத்து விளக்கிக் கூறியுள்ளதாக இந்திய குடியரசு மாளிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எனினும் இரு தலைவர்களும் என்ன பேசினார்கள் என்ற விபரம் எதுவும் இச் செய்தி எழுதும்வரை வெளிவரவில்லை. (வ)

## 40 சட்டத்தரணிகள் அடங்கிய சமாதானக் குழு இன்று யாழ் வரும்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சுமார் நாற்பது சட்டத்தரணிகள் அடங்கிய சமாதானக்' குழுவொன்று இன்று மாலை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

கொழும்பில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட இச் சட்டத்தரணிகள் குழு நேற்று நண்பகல் வவுனியாவில் வந்து தங்கியுள்ளதாக எமது வவுனியா செய்தியாளர் அறிவித்துள்ளார்.

வவுனியாவில் தங்கியுள்ள இக் குழுவினர் இன்று காலை கிளிநொச்சியை வந்தடையவுள்ளார்கள். அங்கு விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துவிட்டு இன்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## கண்காணிப்புக் குழுத் தலைவர்

## திருமலைக் கடற்பரப்பில் ஏழுபேர் கைதாகினர்

(திருமலை)

திருமலைத் துறைமுகப்பகுதிக்கு வெளியே உள்ள கடற்பிர

பேரைக் கைது செய்துதுறைமுகப் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஏழு பேரும்

(நமது நிருபர்)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராகவும், அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் பொது ஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பி யும் இணைந்து வகுப்பு வாத சக்திகளுடன் நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தமிழ்க் கூட்டமைப்புக் கட்சிகள் கண்டித்துள்ளன.**

அரசும், விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சிகள் நேற்று முன்தினம் கொழும்பில், ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் எதிர்ப்புக் கூட்டத்தையும் நடத்தியிருந்தன.

எதிர்க் கட்சிகளின் இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை தமிழ்க் கட்சி தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் எம்பியுமான எம். சிவசிதம்பரம் எதிரணியினரின் எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

ஆண்டாண்டு காலமாக சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் போதெல்லாம் சிங்களப் பேரினவாத சக்திகள் அதனைக் குழப்பி வந்துள்ளன. அந்தச் செயலையே அவர்கள் இப்போதும் தொடர்கிறார்கள்.

யுத்த முனைக்குச் சென்று போரில் கலந்து கொள்ளாது கொழும்பில் சொகுசு வாழ்க்கை நடத்திக் கொண்டு

(2ம் பக்கம் பார்க்க)

# ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று லண்டன் பயணம்

(வவுனியா)

வன்னியில் தங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் ஆன்ரன் பாலசிங்கம் நேற்று இலண்டன் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தாய்லாந்தில் இடம் பெறவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தலைவர் பிரபாகரனுடன் அந்தரங்க ஆலோசனை நடத்தும் பொருட்டு கடந்த மாதம் 25ம் திகதி மாலைதீவில் இருந்து கடல் விமானம் மூலம் அன்ரன் பாலசிங்கமும் அவரது மனைவி அடேல் பாலசிங்கமும், கிளிநொச்சியிலுள்ள இரணைமடுக் குளத்தில் வந்திறங்கியிருந்தனர்.

அன்ரன் பாலசிங்கம் வன்னிக்குச் செல்வதற்கு மாலை தீவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் வழங்கப்பட்ட ஒரு மாதகால விசா

(12ம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் ஜனாதிபதி சந்திரிகா சந்திப்பு

## குடியரசுத் தலைவரையும் சந்தித்தார்

(புதுடில்லி)

ஒரு வார கால உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயையும், குடியரசுத்தலைவர் கே.ஆர்.நராயணனையும் நேற்றுச் சந்திப் பேசியுள்ளார்.

முன்னதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு குடியரசு மாளிகையில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

பிரதமர் வாஜ்பாயையும் குடியரசுத் தலைவர் கே. ஆர்.நாராயணனையும் சந்தித்த ஜனாதிபதி இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சி தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுடன் அரசு செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும் தனது நிலைப்பாட்டை எடுத்து விளக்கிக் கூறியுள்ளதாக இந்திய குடியரசு மாளிகை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எனினும் இரு தலைவர்களும் என்ன பேசினார்கள் என்ற விபரம் எதுவும் இச் செய்தி எழுதும்வரை வெளிவரவில்லை. (வ)

# 40 சட்டத்தரணிகள் அடங்கிய சமாதானக் குழு இன்று யாழ் வரும்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சுமார் நாற்பது சட்டத்தரணிகள் அடங்கிய சமாதாணக் குழுவொன்று இன்று மாலை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

கொழும்பில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட இச் சட்டத்தரணிகள் குழு நேற்று நண்பகல் வவுனியாவில் வந்து தங்கியுள்ளதாக எமது வவுனியா செய்தியாளர் அறிவித்துள்ளார்.

வவுனியாவில் தங்கியுள்ள இக் குழுவினர் இன்று காலை கிளிநொச்சியை வந்தடையவுள்ளார்கள். அங்கு விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துவிட்டு இன்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

# திருமலைக் கடற்பரப்பில் ஏழுபேர் கைதாகினர்

(திருமலை)

திருமலைத் துறைமுகப்பகுதிக்கு வெளியே உள்ள கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் இரண்டு படகுகள் நடமாடியதைத் தொடர்ந்து கடற்படையினர் அங்கு சென்று ஏழு பேரைக் கைது செய்துதுறைமுகப் பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஏழு பேரும் திருமலை மாவட்ட நீதிபதி எஸ். தியாகேந்திரா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்போது அடுத்த மாதம்

(2ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுத் தலைவர் பிரபாவுடன் நேற்றுச் சந்திப்பு

(வவுனியா)

நோர்வேயின் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் பியூறி ஹெவ்டே நேற்று புதுக்குடியிருப்பிற்கு ஹெலியில் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், திருமதி. பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இவ்விஜயத்தின்போது நோர்வே அதிகாரி ஒருவரும் புதுக்குடியிருப்பிற்குச் சென்றிருந்தார்.

இந்தச் சந்திப்பின் போது யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும், அதனோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் இரு தரப்பினரும் கலந்துபேசியதாகத் தெரிய வருகிறது.

இச்சந்திப்பை முடித்துக் கொண்டு கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் பியூறி ஹெவ்டேயும், அவருடன் கூட வந்த அதிகாரியும் உடனடியாக கொழும்பு திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# சோதனைச் சாவடிகளுக்கு இன்று கண்காணிப்புக் குழு விஜயம்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்று ஓமந்தையில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடிக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

இக்கண்காணிப்புக் குழுவிற்கு போக்குவரத்துத் தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே அங்கு குழுவினர் செல்லவுள்ளார்கள்.

ஓமந்தை சோதனைச் சாவடிக்குச் சென்று அங்கு இராணுவத்துடன் கலந்துரையாடி பயணிகள் போக்குவரத்தை இலகுபடுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடிக்கும் இக்குழுவினர் சென்று விடுதலைப் புலிகளுடனும் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கண்காணிப்புக் குழுவில் உள்ள அரச பிரதிநிதியான பி.எஸ். அப்துல்லாவும் அங்கு செல்லவுள்ளார்.

படையினரதும், புலிகளினதும் சோதனைச் சாவடிகளுக்குச் செல்லும் இவர்கள் பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துவது குறித்து இருதரப்பினருடனும் கலந்து ஆலோசிக்கவுள்ளனர். (ம)

## பயணிகள் போக்குவரத்து குறித்து

# தனியார்பஸ் உரிமையாளர்கள் புலிகளுடன் நேற்றுச் சந்திப்பு

(வவுனியா)

கொழும்பில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர் சபைத் தலைவர் கெமுனு விஜயரட்ண தலைமையிலான தூதுக் குழு நேற்று கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துப் பொறுப்பாளர்களுடன் பயணிகள் போக்குவரத்துத் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இப்பேச்சுவார்த்தை தொடர்பான தகவல்கள் எதுவும் வெளிவராத போதும் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் பயணிகள் பஸ் போக்குவரத்துத் தொடர்பாக தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளின் போக்குவரத்துப் பொறுப்பாளர்களுக்கு எடுத்து விளக்கிக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்து திருமலையில் வாகனப் பேரணி

## கொழும்பு நோக்கிப் புப்பட்டது

(திருகோணமலை)

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி, வாகனப் பேரணியொன்று புறப்பட்டது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே உருவாகியுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் இடைக் கால நிர்வாகம் என்ற அடிப்படையில் வடக்குக் கிழக்கு மாகாணம் துண்டாடப்பட இருப்பதாகவும், இதனால் அதனை எதிர்த்தும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்துமே, இவ்வாகனப் பேரணியை நடத்துவதாக கிழக்கு மாகாண மக்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அலங்கரித்த வாகனப் பேரணியில் ஏற்பாட்டுக்கு தலைமைதாங்கும் பௌத்த பிக்குகளும், பொலநறுவை மாவட்ட ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கே. சிவசிங்க உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (இ)

## சிறு விளம்பரம்

### தேவை

ஆண்டு 11வரையான மாணவர்க்கு தமிழ் கற்பிப்பதற்கு மாலைநேர ஆசிரியர் தேவை தொடர்பு1மணிக்குப் பின் ந,விக்னேஸ்வரன் ஆச்சாரி தலைமை ஆசிரியர்426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்- (5022)

## சித்திரைக் கஞ்சி வார்ப்பு

(அராலி)

அராலி வடக்கு மயிலையம்புலம் அம்பாள் ஆலயத்தில் நாளைய தினம் சித்திராப் பௌர்ணமியை ஒட்டி விசேட பூசையும், சித்திரைக் கஞ்சி வார்ப்பும் இடம்பெறவுள்ளது. (உ-214)

## முழுநிலா கலை விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தும், முழுநிலாநாள் கலை விழா, நாளை மாலை 4.00 மணிக்கு, கல்லூரி அரங்கில் அதிபர் என். சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கல்லூரியின் பழையமாணவி திருமதி ருக்மணி ஆனந்தவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்வில் எழுத்தாளரும் யாழ் மக்கள் வங்கி முகாமையாளருமான திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். (இ)

# அனுரா அங்கம் வகிக்கும் கட்சி ஒருபோதும் ஆட்சிப்பீடம் ஏறாது?

## பாராளுமன்றஉறுப்பினர் ஜெயந்த ஆரூடம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் சகோதரரும் முன்னாள் சபாநாயகருமான அனுராபண்டார நாயக்கா அங்கம் வகிக்கும் கட்சி ஒருபோதும் ஆட்சிப் பீடம் ஏறாது என மக்கள் நம்புகிறார்கள். அவரை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நீக்கிய பின்னரே அந்தக்கட்சி ஆட்சிபீடமேற வழியேற்பட்டதென்று பாராளுமன்ற உறுப்பினரான ஜெயந்த சித்தாகொட தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை 7வருடங்கள் எதிர்க்கட்சியாக வைத்திருப்பதற்கு ஆற்றிய பங்கை அனுராபண்டார நாயக்கா தற்போது, ஜே. வி. பி. உள்ளிட்ட, பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு வழங்கி வருவதாக அவர் கூறினார்.

இனவாதத்தைக் கக்கும் ஜே. வி. பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவுடன், ஒரேமேடையில் தோன்றி இதனை அவர் உறுதிப்படுத்தி வருகிறார்.

அனுரா பண்டாரநாயக்கா இருக்கும் கட்சி எப்பொழுதும் தோல்வியடையுமென்றே மக்கள் நம்புகின்றனர் அவரை நீக்கியபின்னரே ஐக்கிய தேசியக்கட்சி மக்களின் அமோக ஆதரவுடன் அதிகாரத்துக்கு வந்தது இவரை முதன்மைப் படுத்தி ஜே.வி.பியினர் மேற்கொண்டு வரும்அரசியற்பிரசார நடவடிக்கைகள் தற்பொதைய எதிர்க் கட்சியைத் தோடர்ந்தும் எதிர்க் கட்சியாகவே இருக்கவைக்கும் என்று குறிப்பிட்ட அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு மக்கள் இந்தநாட்டில் நிம்மதியாக வாழும்வரை ஜே.வி.பி யும் எதிர்க்கட்சிகளும் சமாதானத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

## இலங்கை மின்சார சபை

### யாழ். பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்பிறப்பாக்கிகளில் அவசர திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் காரணமாக எதிர்வரும் சனிக்கிழமை 2002. 04. 27 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை யாழ். குடாநாடு முழுவதும் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதைச் சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத் தருகிறேன்.

இதனால் உங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல்மற்றும்அபிவிருத்தி வேலைகளுக் கைகொடுக்கும்'' இலங்கை மின்சார சபை.

(சி-4007)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 2002ம் ஆண்டுக்கு வேலைகளுக்கான ஒப்பந்தகாரராகப் பதிவு செய்தவர்களிடமிருந்து வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன. வேலை விபரம், கேள்விவிண்ணப்பப்படிவம், என்பனவற்றை கீழ்க் குறிப்பிட்டவாறு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

01 கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 30.04.2002 - 07.05.2002

02 கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி - 08.05.2002 ந. ப. 12 மணி வரை

03 கேள்விப்பத்திரம் திறந்து பார்க்கப்படும் திகதி - 09.05.2002 பி.ப 3.00 மணி

க. கமலசேகரன் ஜே.பி.யு.எம்,
தலைவர்
வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்,
2002-04-24.

(சி4009)

### விபத்தில்

ஏற்றிச்சென்ற மாமன் படுகாயமடைந்துள்ளார்-

நேற்றுகாலை 8-15மணியளவில் துன்னாலை மிந்திரம்மன் கோவிலடியில் இடம்பெற்ற இந்தவிபத்தில் துன்னாலைமேற்கைச் சேர்ந்த ரவி ரஜீவன் (வயது4)என்ற சிறுவனே மரணமடைந்துள்ளான்-

மாமனான வேலாயுதம்விக்னேஸ்வரன் (வயது28)படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்- (இ-23

### எதிர்க்கட்சிகளின்

இத்தகைய எதிர்ப்புநடவடிக்கைகளை மேற்கொள்வது தவறாகும் என்றும்,

ரெலோஅமைப்பைச் சேர்ந்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பிகருத்துவெளியிடுகையில் மீண்டுமொருமுறை இனவாதசக்திகள் உருவெடுத்துள்ளது எனக்கூறினார்.

இனவாதசக்திகளின் இத்தகைய எதிர்ப்புக்கு தமிழ்மக்ள்பலியாகாமல் இருக்க வேண்டும்,

என அகில இலங்கை தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த கலாநிதி என். குமரகுருபரன் கேட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினரின் சமாதான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களிற்கு பலதரப்பிலிருந்தும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### திருமலைக்

8ம்திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு ஏழு பேரையும் பிணையில் விடுதலை செய்துள்ளார்.

இவர்கள் பயணம் செய்து வந்த படகு கைப்பற்றப்பட்டு துறைமுகப் பொலிசாரின் பாதுகாப்பில் விடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்புத் தலைமைச்செயலகம் விடுத்த அறிக்கையில் திருமலைமூதூர்கடற்பிராந்தியத்தில் நேற்று அதிகாலை இரண்டுபடகுள்சந்தே கத்திற்கிடமான முறையில் நடமாடியதை அடுத்து கடற்படையினர் சுமார் 40விடுதலைப்புலிகளை கைது செய்ததாகவும் இதனைஅடுத்து நோர்வேக் குழுஇதில் தலையிட்டதால் அவர்களை நேற்றுமாலையிலேயே விடுதலைசெய்துவிட்டதாகவும் அந்தஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## யாழ்ப்பாணம் -மாநகர சபை

## இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2002

கீழ்க்காணப்படும் இறைச்சிக் கடைகளை 15. 05. 2002 முதல் 31. 12. 2002 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 281/25 (ஜி.எஸ்.ரி உட்பட) யும் கீழ்க் காணப்படும் கேள்விப்பிணைப் பணமும் செலுத்துவதன் பேரில் எதிர்வரும் 10. 05. 2002 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.00 மணி வரையும் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அன்றைய தினம் பி. ப. 2.30 மணிக்கு முன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதே தினம் பி. ப. 3.00 மணிக்கு கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

### விபரம்

| இறைச்சிக் கடைகள் | | மீளளிக்ககூடியகேள்விப்பிணைப் பணம் | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை (ஜி.எஸ்.ரி நீங்கலாக) | ஜிஎஸ்ரி நீங்கலாகமாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 4 | 2500-00 | 5000-00 | 200-00 |
| 2. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல 5 | 2500-00 | 6500-00 | 200-00 |
| 3. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல 6 | 2500-00 | 4300-00 | 200-00 |
| 4. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல 7 | 2500-00 | 7800-00 | 200-00 |
| 5. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல 8 | 1500-00 | 3000-00 | 200-00 |
| 6. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல 9 | 1500-00 | 4000-00 | 200-00 |
| 7. நாவாந்துறை மாட்டிறைச்க்கடை | இல 10 | 1500-00 | 4000-00 | 200-00 |
| 8. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல 11 | 1000-00 | 2500-00 | 200.00 |
| 9. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல 12 | 1000-00 | 2500-00 | 200-00 |
| 10. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல 01 | 2500-00 | 39000-00 | 135-00 |
| 11. பாஷையூர் மாட்டிறைச்சி கடை | இல 03 | 2500-00 | 28500-00 | 135-00 |
| 12. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | இல 07 | 2500-00 | 6500-00 | 195-00 |
| 13. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல 01 | 2500-00 | 2600000 | 112-50 |

குறிப்பு:- ஏற்கனவேதவறுநர் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களும் நிலுவைப்பணம் செலுத்த வேண்டியவர்களும் கேள்விப்படிவம் பெற அருகதையற்றவர்களாவார்.

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2002. 4. 23

(சி-4006)

# நிவாரணத்துக்கு வழங்கும் அரிசியின் விலையை குறைக்க வேண்டும்

### சங்க சமாசத் தலைவர் சி. வி. கே சிவஞானம் மகஜர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மார்ச், ஏப்பிரல் மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சிவப்பு அரிசி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரை வழங்கப்படாமையினால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு இன்னமும் அரிசி வழங்கப்படவில்லை. இத்தாமதத்திற்கான காரணம் கொழும்பில் இருந்து குறித்த அரிசி யாழ்ப்பாணம் வந்து சேராமையேயாகும். இத்தகைய சம்பவங்கள் புதிய அரசாங்கத்தின் மீது விரோதமான எதிரொலிகளையே ஏற்படுத்தும்.

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயநுகர்ச்சிக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் சி. வி. கே. சிவஞானம் புனரமைப்பு மற்றும் இடம் பெயர்ந்தோர் விவகார அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு நேற்றைய தினம் அனுப்பிவைத்த மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு பிரதியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் அம்மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

மார்ச் மாதத்தில் வழங்கப்பட வேண்டிய சிவப்பு அரிசியின் விலை ரூபா 29.50 சதமாகவும், ஏப்பிரல் மாதத்துக்குரிய அரிசியின் விலை ரூபா 38.50 சதமாக அதிகரித்துள்ளமை எவ்வகையிலும் நியாயப்படுதக் கூடியதல்ல.

இந்த வகையில் கூடுதல் விலையில் கொள்வனவு செய்யப்படும் அரிசியை நிவாரணத்துக்கு வழங்கும் போது, நிவாரணமாக பெறக் கூடிய அரிசியின் அளவு குறைவடையும்.

இந்த வகையில், இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்படுகின்ற அரிசி, சீனி, பருப்பு மற்றும் பால்மாபைக்கற் போன்றவற்றின் விலைகள் முறையே 64, 11, 75, 17.5 வீதமாகவுள்ளன.

இந்த நிலையில் அரிசியின் விலை 35 வீதமாகக்குறைக்கப்படல் வேண்டியது மிக முக்கியமாகும். அத்துடன் இந்த வகையில் சேமிக்கப்படும் நிதியைப்பயன்படுத்தி கோதுமை மா, பயறுஉழுந்துசெத்தல்மிளகாய், மல்லி போன்றவை வழங்கப்படுவதுகுறித்து தாங்கள் அவசியம் முடிவு எடுக்க வேண்டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(எ-77)

## யாழ்.நகரில் வாகன நெரிசல் பாதசாரிகள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் கடந்த சில தினங்களாக வாகனப் போக்குவரத்து மிகுந்து காணப்படுகின்றது.

அமைதிச் சூழல் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து நாட்டின் பிற பாகங்களில் இருந்து வாகனங்கள் மூலம் உறவினர்களைப் பார்க்க வருவோர், மற்றும் சுற்றுலா மேற்கொள்வோர், வியாபார நடவடிக்கைகளின் பொருட்டு வருவோர் என நாளுக்குநாள் இத்தொகை அதிகரித்து வருகிறது.

அத்துடன், முஸ்லிம் சகோதரர்களும் தமது சொந்த இடங்களைப் பார்வையிடும் பொருட்டு குடும்பங்களுடன் வந்து செல்கின்றனர்.

இதன்காரணமாகவே வாகனப் போக்குவரத்து அதிகரித்து வீதிகள் நெரிசல் மிகுந்து காணப்படுகின்றன.

தவிரவும் வீதியைக் கடக்கும் சமயங்களிலும், சந்திகளைத் தாண்டும் வேளைகளிலும் பாதசாரிகள் இதன் காரணமாக சிரமப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

இதுஇவ்வாறிருக்கபொலிஸ் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரின் தீவிர நடவடிக்கைகளால் விபத்துக்கள் தவிர்க்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## பனம் பண்டங்களின் விலைகள் திடீர் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பனம் பண்டங்களின் விலை திடீரென அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் அவற்றை முன்பு போல் தேவையான அளவு பெற முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையை அடுத்து பெருமளவில் இங்கு வரும் தென்பகுதிச் சிங்கள மற்றும் முஸ்லிம் சகோதரர்கள் பனம் பண்டங்களை நாட்டமுடன் தேடிக் கொள்வனவு செய்வதையடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## புதையலைத் தோண்டிய பொலிஸ் அதிகாரி கைது

(கொழும்பு)

புதையல் தோண்டி எடுக்கச் சென்றார் என்றகுற்றச்சாட்டின் பேரில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பலாங்கொடை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

பலாங்கொடை மொறகல் கமுவ பகுதியில் கடந்த ஞாயிறன்று புதையல் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட 22 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் இந்தப்பொலிஸ் அத்தியட்சகரும் ஒருவர்எனக் கூறப்படுகின்றது.

(உ)

## நேரசூசிகைகளின்படி பாட போதனைகள் இடம்பெறுவதில்லை

### கல்வி அமைச்சின் செயலர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கில் உள்ள பாடசாலைகள் பலவற்றுக்கு சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளர்கள் இன்னமும் நேரசூசிகளை அனுப்பி வைக்கவில்லை எனவும்,

வேறு சில பாடசாலைகளில் நேரசூசிகையின்படி பாட போதனைகள் இடம் பெறுவதில்லை எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கம் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேரடியாகப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்தபோது இது விடயத்தினைத் தான் அறிந்துகொள்ள முடிந்ததாகவும்,

இப் பிழைகளைத் திருத்தி நடக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-19,6)

## தீர்த்த உற்சவம்

தம்பாட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய தீர்த்த உற்சவம் நாளை தம்பாட்டி கடற்கரையில் இடம்பெறவுள்ளது.

(உ-75)

## இராசி பலன்

25-04-2002
(சித்திரை 12, வியாழன்)
திரயோதசி பி.ப. 1.54 வரை
அத்தம் ந.இ. 12.18 வரை
ராகுகாலம்-1.30-3 00
நல்லநேரம் - 7.30-9.00

**மேடம்**

நல்லசெய்தி, மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை.

**இடபம்**

தொழில் நன்மை, குடும்பக் கவலை, காரிய தாமதம், தனவரவு.

**மிதுனம்**

மாணவர் கல்விச் சிறப்பு, பயந்த சுபாவம், விரும்பாதோர் தொடர்பு, காரிய தாமதம்.

**கடகம்**

நினைத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, புதிய பொருள் சேர்க்கை.

**சிங்கம்**

நிலை மாற்றம், விவாதம், திடீர் நன்மை, முயற்சி கைகூடும்.

**கன்னி**

சுவாரஸ்யம், பெரியோர் ஆதரவு, பொருள் சேர்க்கை, சயன சுகம்.

**துலாம்**

தந்தை வழி உறவு, சுப செலவு, உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**

தெய்வ சிந்தை, தொழில் லாபம், கீர்த்தி, முயற்சி பலிதம்.

**தனுசு**

பிறர் உதவி, நல்ல செய்தி, சுப நிகழ்ச்சி, காரிய சித்தி.

**மகரம்**

அதிக பிரயாசை, கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு, முயற்சி தாமதம்.

**கும்பம்**

எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், உடல் வியாதி, பெரியோர் ஆதரவு,

**மீனம்**

இலட்சுமீகரம், பிரயாண சுகம், குடும்பத்தில் மகிழ்ச்சி, காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## செய்தித் துளிகள்

### ஆதீனத்தில் இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மாத இசை நிகழ்ச்சி நாளை மாலை4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆதீன நாதஸ்வர வித்துவான் ம. சிவசுப்பிரமணியத்தின் நாதஸ்வர இசையை அடுத்து 5. 00 மணிக்கு நியூ வீணா கான இசை மன்ற மாணவர் வழங்கும் பல்லியம் இடம்பெறும்.

5. 45 மணி தொடக்கம் 7. 00 மணிவரை பொன் ஸ்ரீ வாமதேவனின் பாட்டுக்கச்சேரிஇடம்பெறும். (எ)

### சூரிய மின்கலம் வழங்கக் கோரி மகஜர்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவிலுள்ள, 10 இந்து ஆலயங்கள் சூரிய மின்கல வசதி செய்துதரக் கோரி இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளன.

இதேவேளை, இப்பகுதி பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்கள் மின்சார வசதியின்றி இருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-75)

### பண்டிதர் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சைவ பரிபாலன சபையினால் எதிர்வரும் 3, 4, ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ள சித்தாந்த பிரவேச பண்டிதர், சித்தாந்த பால பண்டிதர், சித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்கு நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் முறையே 17, 15, 16, பேர் தோற்றவுள்ளனர். (உ)

### நிர்வாக சபைத்தெரிவு

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளன புதிய நிர்வாக சபைத்தெரிவுக் கூட்டம், பிராந்திய உளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை முத்திரைச்சந்தி ஆரம்பப்பிள்ளைப்பருவமூலவள நிலையத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது, (உ-75)

### வீரப்பன் சகா சரண்

(இந்தியா)

சந்தன மரக்கடத்தல் வீரப்பனின் உதவியாளர் ஒருவர் நீதிபதி முன்னிலையில் சரணடைந்துள்ளார்.

பிரபல கன்னடத்திரைப்பட நடிகர் ராஜ்குமாரை கடத்தியது தொடர்பாககுற்றஞ்சாட்டப்பட்டு காவல்துறையினர் நீண்ட நாட்களாக தேடிவந்த ஒருவரே இவ்வாறுசரணடைந்தவர் ஆவார். (உ-5)

### நீதவான் உத்தரவு

(கொழும்பு)

1997 ஆம் ஆண்டு காரைநகர் கடற்படைத் தளத்தில் பயிற்சி பெற்ற மாலுமி ஒருவரை கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ள இரு முன்னாள் கடற்படை வீரர்களை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துமாறு கொழும்பு பிரதம நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஒருவர் கைதுசெய்யப்பட்டு மேமாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (உ-5)

### குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

நியாப் திட்டத்தின் கீழ், வரும் மாதம் குடாநாட்டில் உள்ள குளங்கள் பலவும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (உ-6)

### சித்திரை பௌர்ணமி விசேட பூசை

(அராலி)

வட்டு. வடக்கு பிளவத்தை பிரமனாச்சி தோட்டத்து கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் சித்திரை பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை மு.ப.10 00 மணிக்கு விசேட பூசை இடம்பெறவுள்ளதோடு சித்திர புத்திரனார் கதையும் படிக்கப்படவுள்ளது. (எ)

### தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில்நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஏழாலை மத்தி புன்கடி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (செ)

### சங்கக்கிளையில் திருட்டு

(காரைநகர்)

காரைநகர் ப.நோ.கூ. சங்கத்தின் 4 ஆம்கிளையில் பெறுமதி வாய்ந்த பலபொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன், இரவுவேளையில்நடைபெற்ற மேற்படி திருட்டுச் சம்பவத்தில்பால்மாவகைகள், பற்றறிகள் நைலோன் கயிறுகள் முதலியன களவாடப்பட்டுள்ளன.

இத்திருட்டு குறித்து ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ 246)

### வர்த்தக நிலையத்தில் தீ விபத்து

(தென்மராட்சி)

திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் இயங்கிய கந்தன் றேடேர்ஸ்என்றவர்த்தகநிலயம் நேற்று முன்தினம் அதிகாலை4மணியளவில் தீப்பிடித்ததில் அங்கிருந்த பல லட்சம் ரூபாய் பெறுமதியான வியாபாரப் பொருட்கள் எரிந்து போயுள்ளன.

சம்பவம் நடைபெற்றஇடத்துக்கு, தகவல் அறிந்துவிரைந்து வந்த யாழ். மாநகர சபையின தீயணைப்புப் படையினரின் முயற்சியினால் தீ அணைக்கப்பட்டது.

இச்சம்பவத்திற்கு மின் ஒழுக்கே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-77)

### விண்ணப்பங்களை அனுப்புக

(யாழ்ப்பாணம்)

வள்ளுவன சனசமூக நிலையத்தின் 36 வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படவுள்ள 6 பேர், 4 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி, 19 மைல் மரதனோட்டப் போட்டி என்பவற்றுக்கான விண்ணப்பங்களை இமமாதம் 27 ம் திகதிக்கு முன்னதாக செயலாளர், வள்ளுவன் சனசமூக நிலையம் இல: 100, பத்திரகாளி கோவில் வீதி, வண்ணார்பண்ணை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 08

## பகுதி II

ஆக்கம் – "சாயிகல்வி வட்டம்"
**கே.வி.குணசேகரம்**
**எம்.விக்னேஸ்வரன்**

**G.T.N வானொலி F.M அலை வரிசையில் 3.4.2002 அன்று ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகள்.**

| | |
|---|---|
| 1) 07.05 நிகழ்ச்சி நிரல் | 10) 06.15 செய்திகள் (தமிழ்) |
| 2) 07.06 கர்நாடக சங்கீதப் பாடல்கள் | 11) 06.30 சிங்கள நாடகம் |
| 3) 07.15 மங்கள இசை நாதஸ்வரம் | 12) 07.00 செய்திகள் (ஆங்கிலம்) |
| 4) 07.40 செய்திகள் (சிங்களம்) | 13) 07.15 சிங்கள நாடகம் (தொடர்) |
| 5) 07.45 சினிமாப் பாடல்கள் | 14) 07.45 தமிழ் நாடகம் |
| 6) 08.15 கிர்ரமியப் பாடல்கள் | 15) 08.15 விவசாயிகள் நிகழ்ச்சி |
| 7) 08.30 விளையாட்டுச் செய்திகள் | 16) 09.00 செய்திகள் தமிழ் |
| 8) 05.00 சிறுவர் பாடல் | 17) 09.15 உலக வலம் |
| 9) 05.45 இசையமுதம் | 18) 09.45 பக்தி பாடல்கள் |
| | 10.30 ஒலிபரப்பு முடிவு |

1. கர்நாடக சங்கீதம் பாடல் ஒலிபரப்பாகும் நேரம் என்ன?
..................................................................................
2. தமிழ், ஆங்கில, சிங்கள செய்திகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் எவ்வளவு?
..................................................................................
3. காலை நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட நேரம் எத்தனை மணித்தியாலங்கள்?
..................................................................................
4. சிங்கள நாடகம் எவ்வளவு நேரம் ஒலிபரப்பானது?
..................................................................................
5. மங்கள இசையில் இசைக்கப்பட்ட தோற் கருவி எது?
..................................................................................
6. மங்கள இசையில் இசைக்கப்பட்ட துணைக் கருவி எது?
..................................................................................
7. தமிழ் நாடகம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தை நியம நேரத்தில் தருக?
..................................................................................
8. 2002.04.03 அன்று திங்கட்கிழமையானால் 2002.03.27 அன்று என்ன கிழமை?
..................................................................................
9. அன்று எத்தனை நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன?
..................................................................................
10. காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்து எத்தனை மணித்தியாலங்களின் பின் மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின?
..................................................................................
11. தமிழ் செய்திகள் முடிவடைந்ததும் வானொலியை நிறுத்தி ஒருவர் தமிழ் நாடகம் கேட்பதற்கு எவ்வளவு நேரம் காத்திருத்தல் வேண்டும்?
..................................................................................

நிகழ்ச்சி இலக்கம் 4, 7, 14 என்பவற்றை ஆங்கிலத்தில் எழுதுக.
12. .................... 13. .......................... 14. ........................

**பின்வரும் நிகழ்ச்சிகளின் நேரத்தைக் குறிப்பிடுக.**

**15. CHILDRENS SONG ................................ 16. NEWS TAMIL . ...........................**
**17. SINGALA NEWS ...................................**

இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்து நிலையத்திலுள்ள ஊழியர்களின் விபரம் கீழே தரப்படுகின்றது. இங்குள்ள பஸ்களின் தொகை 118

| | நிரந்தரம் | தற்காலிகம் |
|---|---|---|
| சாரதிகள் | 128 | 19 |
| நடத்துநர்கள் | 119 | 18 |
| எழுதுவினைஞர் | 12 | 06 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | 16 | 02 |
| திருத்துநர்கள் | 21 | 05 |
| ஓட்டுநர்கள் | 02 | 00 |
| சுத்திகரிப்பாளர் | 08 | 00 |

18. 2.5.2001ல் 15 பஸ்கள் பழுதடைந்து. விட்டன. அன்று சேவையிலீடுபட்ட பஸ்கள் எத்தனை?
..................................................................................
19. 6.5.2001ல் பாடசாலைச் சுற்றுலாவுக்கு 5 பேருந்துகளும், திருமண வைபவத்துக்கு 6 பேருந்துகளும் ஒழுங்கு செய்யப்பட்டன. பழுதடைந்த 9 பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை ஆயின் சேவையிலீடுபட்ட பேருந்துகள் எத்தனை?
..................................................................................
20. 8.5.2001ல் முழுப் பேருந்துகளும் சேவையிலீடுபட்டன. அன்று 8 நடத்துநர்களும் 12 சாரதிகளும் லீவில் நின்றனர். அன்று தற்காலிகமாகவுள்ள எத்தனை சாரதிகளும் நடத்துநர்களும் சேவையிலீடுபட்டனர்?
..................................................................................
21. ஒரு தற்காலிக சார்ரதிக்கு நாளொன்றுக்கு 175.50சதம் கொடுக்கப்படுகின்றது. தற்காலிக சாரதியொருவருக்கு மாதத்தில் 18 நாட்கள் வேலை கொடுக்கப்படுகின்றது அவரின் மாதச்சம்பளம் எவ்வளவு?
..................................................................................
22. பேருந்து சுத்திகரிப்பாளர் ஒருவர் இரவில் 2 பேருந்துகளைச் சுத்திகரிப்பர். எல்லோருமாகச் சேர்ந்து எத்தனை நாட்களில் முழுப் பேருந்துகளையும் சுத்திகரிப்பர்?
..................................................................................

பேருந்து ஒன்றின் 5 நாள் வருமானம் கீழே தரப்படுகின்றது.

| | |
|---|---|
| திங்கள் | - 1235.00 |
| செவ்வாய் | - 2462.00 |
| புதன் | - 1988.00 |
| வியாழன் | - 2210.00 |
| வெள்ளி | - 1865.00 |

23. பேருந்தின் சராசரி வருமானம் எவ்வளவு?
..................................................................................
24. ஆகக் குறைந்த வருமானம் வந்த நாள் எது?
..................................................................................
25. கூடிய வருமானத்துக்கும் குறைந்த வருமானத்துக்குமிடையேயான வித்தியாசம் எவ்வளவு?
..................................................................................
26. பருவ காலப் பயணச்சீட்டின் மூலம் பயணம் செய்பவர்களால் 1072.00 மாதாந்தம் கிடைக்கிறது. ஒரு வருடத்துக்கு எவ்வளவு பணம் கிடைக்கும்?
..................................................................................
27. ரூபா. 25.00 பணம் செலுத்திப் பருவகாலச் சீட்டுப் பெற்றவர் எண்ணிக்கை 20 ஆகும். ஏனையோர் ரூபா.22.00 செலுத்திப் பருவ காலச் சீட்டைப் பெறுகின்றனர். இவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
..................................................................................
28. ஒரு ஓட்டுநர் எத்தனை பேருந்துகளுக்கு வேலை செய்ய வேண்டும்?
..................................................................................
29. பேருந்து ஒன்றின் எரிபொருள் நிரப்பும் தாங்கி 276L கொள்ளளவுடையது. முழுமையாக டீசல் நிரப்பப்பட்ட நிலையில் சென்ற பேருந்து திரும்பி வந்த பின் 188L டீசல் அடிக்கப்பட்டது. அன்று அப்பேருந்துக்குச் செலவான டீசல் எவ்வளவு?
..................................................................................
30. ஒரு L டீசல் ரூபா 23.00 எனின் அன்றைய தினம் டீசலுக்காக செலவு செய்யப்பட்ட பணம் எவ்வளவு?
..................................................................................

**பின்வரும் விபரணத்தை வாசித்து 31~ 37 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக?**

பழங்களில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான கனிப் பொருட்களும், விற்றமின்களும் அதிகளவில் உண்டு. வாழைப்பழத்தில் கல்சியம், பொஸ்பரஸ், கந்தகம், இரும்புச் சத்து, பொட்டாசியம் ஆகியன அதிகள்வில் இருப்பதோடு விற்றமின்களான A,B,C என்பனவும் உண்டு. அதனால் வாழைப் பழத்தைத் தினமும் நாம் உண்ணல் வேண்டும், வாய் நாற்றம், வயிற்றுப்புண், இருமல், மார்புவலி, நீரிழிவு, சீதபேதி, மயக்கம் முதலிய நோய்களைக் குணமாக்கும் சக்தி மாதுளம் பழத்திற்குண்டு.

31. விற்றமின் D இயற்கை மூலம் எவ்வாறு கிடைக்கிறது?
..................................................................................
32. தினமும் உண்ணக் கூடிய மலிவான சத்துள்ள பழம் எது?
..................................................................................
33. அதிகளவு கனியுப்புக்களையும், விற்றமின்களையுமுடைய பழம் எது?
..................................................................................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

34. இரும்புச்சத்து, பொட்டாசியம், உயிர்ச்சத்து, கூடிய பழம்
    1) பலாப்பழம் 2) மாதுளம் பழம் 3)வாழைப்பழம்
35. நீரிழிவு நோயாளர்கள் உண்ண வேண்டிய பழம்?
    1) மாம்பழம் 2) திராட்சைப்பழம் 3) மாதுளம்பழம்
36. காற்றால் பரவும் நோய்.
    1) இருமல் 2) நீரிழிவு 3) மார்பு வலி
37. நீரால் பரவும் நோய்.
    1) வயிற்றுப்புண் 2) சீத பேதி 3) நீரிழிவு

கெட்ட வழியில் சென்று நாம் துட்டராக மாறா வண்ணம்
அருகிருந்து அறிவு தந்து அணைத்து எம்மை அறிவுறுத்தி
நிழலைப் போல தொடர்ந்து வந்து தவறு செய்யும் வேளை தன்னில்
தட்டிச் சொல்லிப் புரிய வைத்து வாழவைக்கும் எங்கள் ஆசான்.

இப்பாடலின் கருத்தை இலகுவான தமிழில் எழுதுக.
38. ..................................................................................
39. ..................................................................................
40. ..................................................................................
41. ..................................................................................
42. துட்டன் என்பதன் எதிர்ச்சொல் ....................................
43. அணைத்தல் என்பதன் ஒத்தசொல் ..................................

சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக
44. எம்மைத் தொடர்ந்து வருவது (நண்பர், நிழல், பெற்றார்)
45. பாடலில் வரும் தன்மைச் சொல் (ஆசிரியர், நாம், துட்டர்)
46. பாடலில் வரும் படர்க்கை ( அறிவு, நாம், ஆசிரியர்)
47. ஆசிரியர் என்பதன் ஒத்தசொல் அல்லாதது (குரு, ஆசான், அதிபர்)

சரியான விடையின் இலக்கத்தை அருகிலுள்ள பெட்டியில் எழுதுக.
48. சுயசரிதை:-
    1. ஒருவரைப் பற்றி இன்னொருவர் எழுதுவது
    2. தன்னைப் பற்றித் தானே எழுதுவது
    3. நடைபெற்று முடிந்த சம்பவங்களை எழுதுவது .......
49. மணி விழா:-
    1. 60ஆவது ஆண்டில் கொண்டாடப்படுவது
    2. 50ஆவது ஆண்டில் கொண்டாடப்படுவது
    3. 25ஆவது ஆண்டில் கொண்டாடப்படுவது .......
50. தபுதாரன்:-
    1. தாயை இழந்தவன்
    2. தந்தையை இழந்தவன்
    3. மனைவியை இழந்தவன்

கீழே தரப்பட்டுள்ள பழமொழியின் சரியான விளக்கத்தின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.
51. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
    1. தொடர்ந்து சலிப்படையாது முயற்சித்தால் வெற்றி பெறுவார்.
    2. தொடர்ந்து அடித்தால் அம்மி உடையும்.
    3. முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கலாம்.
52. நிறைகுடம் தளம்பாது.
    1. அறிஞர்கள் ஆரவாரம் செய்வார்கள்
    2. பேரறிவினர் அமைதியாக இருப்பார்கள்
    3. புலவர்கள் சபையில் ஆரவாரம் செய்வார்கள்
53. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
    1. சந்தர்ப்பம் உள்ள போது காரியங்களைச் செய்தல் வேண்டும்
    2. காற்றுள்ள போது பட்டம் விடலாம்
    3. இளமையிலேயே கற்றல் வேண்டும்

இராசி பலன் 03.03.2001 ஞாயிறு தொடக்கம் 2001.03.09 வரை
உத்தராடம், அவிட்டம், திருகோணம் 1ம்,2ம்,3ம் இராசிக்காரர்களுக்கு சனியின் பார்வை நன்றாக விருப்பதால் தொழில் விருத்தி, நினைத்த காரிய ஜெயம், வீடு, வாகனங்கள் வாங்கல் விற்றலில் இலாபம் கிடைக்கும். கை கால் பிடிப்பு, உஷ்ண நோய்கள் வரலாம். புதன் வியாழக் கிழமைகளை அவதானமாகக் கழிக்கவும் வெள்ளி, சனி, நன்மை தரும்.

*சோதிடர்*
*எம்.வி.ஜி*

54. மேற் கூறப்பட்ட நட்சத்திரங்களின் இராசி?
    1. கடகம் 2. கும்பம் 3. மகரம்
55. இப்பலன்
    1.ஒரு வாரத்திற்கு 2. ஒரு மாதத்திற்கு 3. ஆறு நாட்களுக்கு
56. உஷ்ண வருத்தம் ஒன்று
    1. வாய்ப்புண் 2. கசம் 3. வாதம்
57. இவ்விராசிக்காரர்கட்கு இலாபம் தரும் தொழில்
    1. விவசாயம் 2. வியாபாரம் 3. கைத்தொழில்

விடைதருக.
58. இவ்விராசிக்காரரின் நன்மையான நாட்களின் திகதிகள் எவை?
..................................................................................

**மிகுதி வினாக்களும், கடந்தவார வினாக்களுக்கான விடைகளும், மாணவர்களின் பெயர் விபரங்களும் நாளைய இதழில் வெளியாகும்.**

## இன்று ஒரு தகவல்

### அரசு மரமும் அருமருந்து

அரசு பெரிய மரமாக வளரும். திருமரம், சராசனம், அஸ்வத்தம் என்பன வேறு பெயர்கள். இது பரவலாகக் காணப்படும் பெரிய மரவகைகளில் ஒன்றாகும். ஆனி மாதம் முதல் ஆவணி மாதம் வரை இம்மரத்தில் பூக்கள் மலரும். இதன் இலை கரும்பச்சை நிறத்துடன் இதய வடிவில் இருக்கும். பழங்கள் பழுத்த பின்னர் சிவப்பு நிறமுடையதாக இருக்கும். இந்துக்களாலும், பௌத்தர்களாலும் இம்மரம் தெய்வத்தன்மை உடையதாகக் கருதப்பட்டு கோவில்களில் வளர்க்கப்படுகிறது. இலை, விதை, பட்டை, வேர் என்பன பயன்படும் உறுப்புகளாகும். இதன் பழத்தில் ஈரப்பதன் 9.9கி. அல்பு மினாய்ட்ஸ் 7.9கி, கொழுப்புச்சத்து 5.3கி மாவுச்சத்து 34.9கி, நிறச்சத்து 7.5கி, சாம்பல்சத்து 8.3கி, மணல்சத்து 1.85கி, பாஸ்பரஸ் 69 மி. கி.

இது துவர்ப்பும், கசப்பும் கொண்ட சுவையை உடையது. இது ஐந்துதுவர்ப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இது துவர்ப்பியாகச் செயல்படுவதால் கருப்பையில் ஏற்படும் கோளாறுகளைப் போக்கி கரு வளர்வதற்கேற்ற தகுந்த சூழ்நிலையை உண்டாக்குகிறது. இதன் இலைக் கொழுந்து பெண்களுக்குக் கர்ப்பப்பையின் வெப்பத்தையும் ஆண்களினது தாதுக்களின் வெப்பத்தையும் நீக்கி, நீர்த்த விந்துவைக் கட்டும். அரசு இலைக்கொழுந்தைப் பசுவின் பாலில்போட்டு அவித்து அதனுடன் சர்க்கரை சேர்த்து அருந்திவர சுரம் தீரும்.

இதன் விதைக்கு மலத்தை இளக்கும் தன்மையுண்டு. இதன் விதையைப் பொடித்து குறிப்பிட்ட அளவில் உண்டு வர மலச்சிக்கல் தீரும். பசி உண்டாகும். பின் சூரணம் செய்து கொள்ள வேண்டும் இதில் ஒரு தேக்கரண்டி வீதம் பாலும் சர்க்கரையும் கலந்து தொடர்ந்து இருவேளை அருந்திவர, அழிந்து போன சுக்கிலத்தைப் பெருக்கி ஜீவ அணுக்களையும் அதில் பெருக்கும்.

அரசம் பட்டையைக் கொண்டுவந்துநன்கு உலர்த்தி சூரணம் செய்து கொள்ள வேண்டும். இதனை நாள் பட்ட புண்களின் மேல் தூவி வர அவை விரைவில் ஆறும். இதன் பட்டையை உலர்த்தி பொடித்த பின்னர் தீயில் எரித்து சாம்பலாக்க வேண்டும், இந்தச் சாம்பலை குறிப்பிட்ட அளவு நீரில் ஊறவைத்து சிறிது நேரம் சென்ற பின்னர் அதனை வடிகட்டிக் குறிப்பிட்ட அளவு அருந்த விக்கலையும், வாந்தி வருகின்ற உணர்வையும் நீக்கும். இதன் பட்டையை 35 கிராம் எடுத்து அத்துடன், 8 டம்ளர் நீர்விட்டு முறைப்படி குடிநீரிட்டு 2 டம்ளராக குறுக்கி தினமும் இருவேளை குடித்து வர, சொறி, சிரங்கு குணமாகும். இந்நீரினால் வாய் கொப்பளித்து வர வாய்ப்புண்குணமாகும். உடல் உஷ்ணம் குறையும்.

இதன் வேர்ப்பட்டையைக் கொண்டு செய்யப்படும் குடிநீருடன் சர்க்கரை, பால் கலந்து தினமும் அருந்திவர மேக நோய், சிறுநீர் எரிச்சல் தீரும். இம்மரத்தைக் கீறினால் அதிலிருந்து பால் வடியும். இப்பாலை பாதத்தில் ஏற்படும் பித்த வெடிப்புகளின் மீது தடவ குணம்தெரியும். தோலில் தோன்றும் வெடிப்புகளுக்கும் இதைப் பூசிவரலாம். சித்த மருத்துவர்கள் இதன் இலைக்கொழுந்து மற்றும் சாற்றைப் பாதரசத்தைக் கட்டுவதற்கும், வெள்ளீயத்தைப் பஸ்பமாக்குவதற்கும் பயன்படுத்துகிறார்கள். □

டாக்டர் இரா. கண்ணன்

---

கல்விசார் ஊழியர்கள்

# தனிப்பட்ட சிபார்சுகள் மூலம் தேவைகளை நிறைவேற்றக் கூடாது

### மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

கல்விசார்ந்த செயற்பாடுகளை, கல்வித்துறைசார்ந்த அதிகாரிகளின்மூலம் மட்டுமே நிறைவேற்றிக் கொள்ளுமாறு கல்விசார் ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களை மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஐ. எம். இஸ்ஸதீன் கேட்டுள்ளார்.

கல்வித்துறையைப் பொறுத்தவரை பாடசாலைகள், கோட்டக்கல்வி அலுவலகங்கள், வலயக்கல்வி அலுவலகம் ஆகியன ஒரு வலைப்பின்னலினூடாக செயலாற்றிவருகின்றன.

ஆனாலும் கல்விசார் ஊழியர்களில் பெரும்பான்மையினர் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், அமைச்சர்கள் மூலம் தனிப்பட்ட ரீதியில் சிபார்சுகள் மற்றும் முறைப்பாடுகளை நிறைவேற்றிவருகின்றனர்

இதனால் வீண் சிரமங்களும் காலதாமதங்களும் ஏற்பட்டுவருகின்றன.

சிபார்சுகளையோ, முறைப்பாடுகளையோ தெரிவிக்க விரும்பும் கல்விசார் அலுவலர்கள் கல்விசார், ஆளணியினூடாக அவற்றை மேற்கொள்வதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியுமென மாகாணக்கல்விப் பணிப்பாளர் அனைத்துகல்விசார் ஊழியர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார். (உ-19-6)

---

# பாசையூரை மீளக் கட்டியெழுப்ப நிதி ஒதுக்குமாறு ஜயலத்துக்கு மகஜர்

(தென்மராட்சி)

இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக முற்று முழுதாக சேதமடைந்ததும், அழிக்கப்பட்டதுமான பாசையூர் பகுதி பொதுமக்களின் வீடுகள் புனரமைப்பதற்கும் மீளக்கட்டிக் கொள்வதற்கும் புனர்வாழ்வு மற்றும் அகதிகள் விவகார அமைச்சு நிதியுதவி வழங்க முன்வர வேண்டும்.

பாசையூரில் இயங்கிவருகின்ற சென். அந்தோனியார் மீன் பிடியாளர் சங்கம், இளைஞர் கழகம். விளையாட்டுக் கழகம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் என்பன கூட்டாக அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்மகஜர்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பாசையூர் கடற்கரை வீதி வழியாக ஹொலி குறொஸ் வைத்திய மனை வரை செல்கின்ற வீதியில் போடப்பட்டுள்ள வீதித்தடைகள் நீக்கப்பட்டு பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

பாசையூர் பகுதியில் மூடப்பட்ட நிலையில் இருக்கும் மாநகரசபையின் பிரசவ விடுதியை மீளவும் இயங்கச் செய்தல் வேண்டும்.

யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து நடத்தப்பட்ட பாதை இல:790- கொழும்புத்துறைக்கான பஸ் சேவையை மீளவும் ஆரம்பித்தல் வேண்டும்.

அத்துடன், கடற்கரை வீதியில் முன்பு இயங்கிய சனசமூக நிலையம் மற்றும் நூலகத்தினை மீண்டும் இயங்கச் செய்தல் வேண்டும்.

பாசையூர் பகுதி பொதுமக்களின் வசதி கருதி இவற்றைச் செய்துதரும்படி அம்மகஜரில் கோரியுள்ளனர். (உ-77)

---

பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர்-அனுரா

# நாட்டில் புரையோடிப் போயுள்ள இனவாதத்தை நிராகரிக்கிறாராம்

(கொழும்பு)

மக்கள் மத்தியிலும் கட்சிகளிடையேயும் குடிகொண்டுள்ள இனவாதத்தை முற்றாக நிராகரிப்பதாக பொதுஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மக்கள் விடுதலைமுன்னணிஒழுங்குசெய்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; அரசியல் பேதங்களை மறந்து நாட்டைப் பாதுகாக்கும நோக்குடன் அனைத்து மக்களும் அணிதிரள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இனவாதிகளால் இயக்கம் ஒன்று நேற்றுமுன் தினம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட போது, ஜனாதிபதியின் பிரதி நிதியாக அனுராபண்டாரநாயக்கா கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இன்று தேர்

(அராலி)

அராலி மத்தி உலோக பிட்டிப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா இன்றும், தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறவுள்ளன. (உ-214)

## முழுநிலாக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அகவொளி நிலையத்தின் முழு நிலாக் கருத்தரங்கு நாளை பி ப 3.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

'அன்பின் செயற்பாடுகள்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ர விரிவுரையாளர் கே. சிவானந்தமூர்த்தி இந் நிகழ்வில் கருத்துரையாற்றவுள்ளார். (உ-6)

---

# நிர்க்கதிநிலையிலுள்ளமீனவர்களுக்கு இருப்பிடவசதியை ஏற்படுத்துக!

### கடற்றொழில் அமைச்சருக்கு மகஜர்

(தென்மராட்சி)

குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் காரணமாக பெரும் எண்ணிக்கையான மீன்பிடியாளர் குடும்பங்கள் தமது சொந்த வீடுகளை இழந்து விட்ட நிலையில் நிர்க்கதியாகியுள்ளன. இத்தகையகுடும்பங்களுக்குரிய வீடமைப்புத்திட்டங்களைநிர்மாணம் செய்ய வேண்டும்.

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின்சமாசம்கடற்றொழில்அமைச்சருக்குநேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

சமாசத்தின் தலைவர் எஸ். தவரட்ணம் பொதுமுகாமையாளர் ஆர். இராஜராம் ஆகியோரால் கையொப்பமிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்த நிலையில் இன்னமும் வாழ்கின்ற வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 496 குடும்பங்களுக்கும், வலிகாமம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த 853 குடும்பங்களுக்கும் உடனடியாக மீள்குடியமர்வுத் திட்டங்கள் அமுல் செய்யப்பட வேண்டும்.

குருநகர் மற்றும்சுழிபுரம் பகுதிகளில் வாழ்கின்ற மீனவ குடும்பங்கள் வீடமைப்புத் திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும். இந்த வகையில் குருநகரில் 200 வீடுகளும் சுழிபுரத்தில் 100 வீடுகளையும் முதல் கட்டமாக அமைக்கலாம்.

மீன்பிடிக் கிராமங்களான கொழும்புத்துறை, சுழிபுரம், மாதகல், சேந்தாங்குளம், காரைநகர், வேலணை போன்றஇடங்களில்மீனவர்களுக்கானஇளைப்பாறும்அறைகள் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

குடாநாட்டில் பிடிக்கப்படும் கடல் உணவு வகைகளுக்கு கொழும்பில் நல்ல சந்தை வாய்ப்பைப் பெறுவதற்கான வசதிகள் செய்யப்படவேண்டும். அதற்கு வசதியாக மீனவ நிலையங்களுக்குச் செல்லக்கூடிய பாதைகள உடனடியாகத் திருத்தம் செய்யப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் படகுகளைத் திருத்தக்கூடிய படகுத்துறைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அதன் மூலம் மீனவர்கள் படகுகள் உடனுக்குடன் திருத்தப்பட முடியும்.

மீன்பிடித்தொழிலில் மீனவர் ஈடுபட்டிருக்கும் சமயங்களில் மின்னல் இடி போன்றவற்றினால் தாக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு குருநகர், பாஷையூர், நாவாந்துறை, புளியான்துறை போன்ற இடங்களில் மின்னல்கடத்திகளை அமைத்தல்வேண்டும்.

யாழ். பல்கலைக் கழகத்தில் மீன்பிடிக் கற்கை நெறியில் பயின்று டிப்ளோமா பட்டம் பெற்றவர்களை மாவட்டத்துள்ள பாடசாலைகளில் மீன்பிடி விஞ்ஞானத்தைப்பயிற்றுவிக்க வசதியாக உள்வாங்க நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

இப்படி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ-77)

### பவ்ரல் அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்கள் வன்முறையற்றதாகவும், சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் நடைபெற சகல அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என '' பவ்ரல் '' அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐ. தே. கட்சியின் பொதுச்செயலாளர் சேனரத் கப்புக்கொட்டுவ, எதிர்கட்சித் தலைவர்மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருடன இவ்விடயமாக பேச்சுவார்த்தைநடத்தி அமைதியான தேர்தலுக்குஒத்துழைக்கும்படி அவ் வமைப்பு வேண்டுகோள விடுத்துள்ளது. (உ-9)


---

## சிந்தனைக்கு விருந்து

புரிந்துணர்வு குடும்ப வாழ்விற்கும் வேண்டும்

புரிந்துணர் வென்ப தரசியலில்
புகுவது மட்டும் போதாது
சரிந்திட விடாது குடும்பத்தின்
சங்கதி யாவிலும் அதுவேண்டும்
வருந்திப் பின்பு பயனில்லை
வாழ்வு சிதைந்தபின் எண்ணாமல்
பொருந்தி உறவினைப் பேணிநிதம்
புரிந்துணர் வுடன்நாம் வாழ்ந்திடுவோம்.

- பழையவன்



# காரைநகர் கருங்காலி போ
# ஆலய மகா கும்பாபிஷேக ச

## ஸ்ரீ காஞ்சிகாமகோடி ஜெயந்திர ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் ஆசிச் செய்தி



சிவ பக்தர்களில் முதன்மை ஸ்தானத்தைப் பெற்ற இராவணனால் ஆளப்பட்ட ஸ்ரீ லங்கா யாழ்ப்பாண கரைநகர் கருங்காலி போசுட்டிப் பகுதியில் வசிக்கும் மக்கள் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், கோபுர தரிசனம் கோடி. புண்ணியம்" என்பதை உணர்ந்து அப்பகுதியில் இராஜகோபுரத்துடன் கூடிய கோயிலைக் கட்டி அத்திருக்கோயிலில் ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முருகப் பெருமான் முதலிய மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்த அந்தக் கோயிலின் ஜுர்ணோத்தாரண திருப்பணிகளை முடித்து 25.04.2002 இல் மகா கும்பாபிஷேகம் செய்ய இருப்பதையும் அதனைத் தொடர்ந்து சிறப்பு மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

சூரிய பகவானின் ஒளி உலகமெங்கும் பரவி எல்லா தேசங்களையும் பரிசுத்தம் செய்வதுபோல் நமது அனாதியான ஸனாதனதர்மங்களுக்கு ஆணிவேராக உள்ள வேதங்களில் கூறப்பட்ட தர்மங்கள் உலகமெங்கும் பரவி பக்தி மார்க்கத்தையும் ஆன்மீக நெறிகளையும் வளர்த்து வருகின்றன. அந்த முறையில் ஈழ யாழ்ப்பாணம் எங்கும் வசிக்கும் மக்கள் அனைவரும் உலக ஷேமத்திற்காக செய்யப்படும் இந்த மஹா கும்பாபிஷேகத்திற்கு அனைவரும் தாராளமாக உதவிகளைச் செய்தும், பிறர்களையும் செய்யும்படி செய்தும், உடனிருந்தும் மங்களகரமான மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்து ஸ்ரீவிநாயகர், ஸ்ரீமுருகப்பெருமான் அருளால் சகல மங்களங்களையும் அடைந்து பிரமக்ஷேமமாக வாழவேண்டுமென்றும், வெளியிடப்படும் மலர் மக்களுக்கு பயன்படும்படி அமையவும் ஆசீர்வதிக்கிறோம்.

No:- 01 Salai Street, Kancheepuram- 631502

நாராயணஸ்மிருதிர்

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



காரைநகர் பதியில் எழுந்தருளி இருந்து நல்லாட்சி புரியும் முருகப்பெருமானுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். கலியுகத்து தெய்வமாக இருக்கும் முருகப் பெருமானுக்கு நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் இம்மைக்கும் மறுமைக்கும் புண்ணியப் பேற்றைத் தருவதாகும். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகப் பெருமான் இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும்பொருட்டு எழுந்தருளி இருந்து அருள் வழங்குகின்றார். சைவசமயமும் தமிழ் மொழியும் இரு கண்ணெனப் போற்றி வாழும் மக்கள் நிறைந்த காரைநகரில் நிறைந்த ஆலயங்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் வாழும் மக்களுடைய ஆன்மீக சிந்தனையை மேலெடுத்துச் செல்வதாக கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைத்து சைவ மக்களுக்கும் இறையருளைப் பெற்றுத் தருவதாகும். ஒரு ஆலயத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கொருமுறை செய்யும் அபிஷேகம் இதுவாகும். இதனை செய்வதும், பார்த்து தரிசிப்பதும் புண்ணியப்பேற்றைத் தருவதாகும். கும்பாபிஷேகத்தை செய்கிற ஆலயக் குருமார்களுக்கும், காரைநகர் வாழ் மக்களுக்கும் இறையாசி கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## ஆலய கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை



"ப்ரம்மண ஆகாசாத் சம்பூத
ஆகாசாத் வாயு: வாயோரக்னி:
அக்னேராப்: அத்ப்ய: ப்ருதுவ்..............."

என்பது உப நிஷத வாக்கு. அதாவது ஆகாயமெங்கும் நின்றந்துள்ள பரம் பொருள் காற்றை அடைகிறது. காற்றிலிருந்து நெருப்பையும் நெருப்பில் இருந்து நீரையும், நீரில் இருந்து நிலத்தையும் அடைகிறது.

மனம் வாக்குகளுக்கு எட்டாமல் இருக்கின்ற இறைவனை எமது சிற்றறிவுக்கு எட்டிய வகையில் வழிபாடுகள் செய்வதற்கு வாய்ப்பாக ஆலயங்களை அமைத்துத் திருவுருவங்களை பிரதிஷ்டை செய்யும் வழிவகைகளை ஆகமங்கள் கூறுகின்றன.

வேத உபநிடதங்களும், சிவாகமங்களும் கூறும் முறையில் ஆலயங்களிலே நிகழ்த்தப்படும் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகங்கள் இறைசாந்நித்தியத்தை அங்கு தோற்றுவிக்கின்றன.

இந்த வகையில் காரைநகர் போசுட்டி கருங்காலிப் பதியிலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற கருணைக் கடலான கலியுக வரதன், வள்ளி நாயகி, தெய்வ நாயகி, சமேத சிவஸ்ரீசுப்பிரமணிய சுவாமிக்கு இன்று நிகழும் நவகுண்டபக்ஷ சப்ததின யாக மஹா கும்பாபிஷேகமானது காரைநகர் வாழ் சைவப் பெருமக்களுக்கு மட்டுமல்லாமல் நாட்டுமக்கள் அனைவருக்குமே நல்லருள் புரிந்து நல்வாழ்வை வழங்கும் என்பதில் ஐயமில்லை.

பெருஞ்சாந்தி என வழ்ங்கும் மகா கும்பாபிஷேக விழாவினை நடத்தி வைத்தோரும், அதற்கு உதவிகள் புரிந்தோரும், ஆலய பரிபாலகர்களும், திருப்பணிச் சபையினரும் மற்றும் இவ்விழாவிலே கலந்துகொண்ட யாபேரும் கார்த்திகேயப் பெருமானின் கருணைப் பெருக்கினால் சகல செல்வ யோகம்மிக்க பெருவாழ்வு வாழ வேண்டுமென்றும் நாடும், நகரும், ஊரும், உலகும் சுபீட்சமடைய வேண்டுமென்றும் பிராத்தித்து நல்லாசிகூறி அமைகின்றேன்.

"சர்வே ஜனா சுகினோ பவந்து"

சிவப்பிரம்மஸ்ரீ. க. ச. சோமாஸ்கந்தக்குருக்கள்
ஆலய கும்பாபிஷேக பிரதமகுரு



ஆலயத்தின் அழகு மிகு தோற்றம்

## திருப்பணிச் சபைத் உள்ளத்திலி



காரைநகர் மக்கள் கந்தபுராண கலாசாரத்துடன் வ
இக்கலாச்சாரத்தை ஏற்படுத்துவதில் முருகன் ஆலயங்க
போசுட்டியில் முருகனைப் பிரதிஷ்டை செய்து சைவ
இற்றைக்கு 125 ஆண்டுகளின் முன் தற்போதைய அறங்க
ஆகமவிதிப்படி இவ்வாலயத்தை நிர்மாணித்தனர். மூலஸ்
இங்கு நித்திய, நைமித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற
தேர் முட்டி, பஞ்சதள இராஜகோபுரம் ஆகியன விதிமுறைகளுக்கமைய அ
இற்றைக்கு 30 ஆண்டுகளுக்கு முன் கடம்ப மரநிழலிலே வேலாயுதப்
வழிபாடுகள் நடைபெறுகிறது. கடந்த 75 ஆண்டுகளின் முன் ஸ்தாபிக்கப்பட்ட
நடாத்துதல், சமயப் பிரசங்கங்கள் ஒழுங்குபடுத்துதல், அன்னதானம் செ
நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பாக செயற்படுகின்றனர். இக்கோவில் பரிபாலகர்க
என்ற பாடசாலையையும் ஆரம்பித்து இக்கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கும்
அக்காலத்தில் கல்வி கற்ற மாணவர்களிடையே சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்
ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாலயத்தில் மாதப்பிறப்பு, தைப்பூசம், கார்த்திகை உற்சவம், வை
போர், திருக்கல்யாணம், ஐப்பசி வெள்ளி, திருவெம்பாவை போன்ற தினங்
என்பன சிறப்பாக இடம்பெறும். கந்தசஷ்டி விரத காலங்களில் புராணப்பட
பக்தர்கள் ஆலயத்தில் தங்கி உபவாசம் இருப்பர். சித்திராப் பௌர்ண
பத்துத் தினங்கள் சிறப்பான மகோற்சவம் இடம்பெறும். மூன்று காலப் பூசை
வியாவில், கருங்காலி ஆகிய கிராமங்களை ஒன்றிணைக்கும் ஒரு அமை

இடம் பெயர்வு காரணமாக உரிய காலத்தில் மகா கும்பாபிஷேகத்தினை
திருப்பணிச் சபை ஆலய அறங்காவலருடன் இணைந்து 09.07.2001 அன்று ப
ஆலோசனை பெற்றுச் சிறந்த கலைஞர்களின் கைவண்ணத்தில் பாரிய
கைகூடியுள்ளது.

யந்திர பூசை 45 தினங்கள் சிறப்பாக இடம்பெற்று இம்மாதம் 17ந் தி
25.04.2002 ஆகிய இன்று வியாழக்கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெற
மகாகும்பாபிஷேகத்தினை தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் ந

மகா கும்பாபிஷேக தரிசனத்திற்காக இலங்கையின் பல பாகங்களில் இ
இருந்தும் பல பக்தர்கள் வருகை தந்துள்ளமை சிறப்பம்சம் ஆகும். இ
உதவி, பண உதவி புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது பணிவா

இன்றைய மகா கும்பாபிஷேக நன்நாளில் அடியார்கள் அனைவரும் போசு
அனைத்து செல்வங்களையும் பெற்றுய்ய வேண்டி முருகப் பெருமானின்


குகன் ஸ்ரோர்ஸ்
180, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

இ. ச. பேரம்பலம் அன் சன்ஸ்
50, 52, 54 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

கஜமுகன் ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# ாசுட்டி ஸ்ரீ முருக மூர்த்தி
# சிறப்புமலர் - 25.04.2002





## மாவையாதீன பிரதம குருவின் ஆசியுரை



குன்றுதோறும் ஆடல் புரிந்து அழகிற்கும், அறிவிற்கும் தலைமையாகி, உலக சம்ரஷணைக்காக உதித்த முருகப் பெருமான் இன்றும் பல்கோடி மக்களது இதயங்கவர்ந்த முழுமுதற் கடவுளாகவே வணங்கப்படுகின்றார். முருகவேளின் திருக்கரங்களில் உள்ள ஆயுதங்கள் அத்தனையும் ஏதோவோர் வகையில் உலகை வழிநடாத்தி வருவதால் எங்கெல்லாம் சிவத் தமிழர்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் இவ் ஆயுதங்களையும் முருகனாகவே கணித்து வழிபட்டு உய்வடைகிறார்கள். முருகப்பெருமானது திருப்படைக்கலங்கள் பெருமானின் ஆணை கிடைத்ததும் உடனேயே சீறியெழுந்து பகைமைகளை அழித்து வெற்றியோடு கங்கை புனலாடி மீண்டும் அத்திருக்கரங்களில் வந்துசேரும். இதுபோல் பக்தர்களும் கங்கைநீராடி, ஆசாரங்களோடு தூய மனத்தினராய் சுகந்த புஷ்பபத்திரங்களை காணிக்கைக்காக ஏந்தி, பெருமானின் மலரடியை வணங்க வேண்டும் என்று கூறி மஹா கும்பாபிஷேகப் பெரு விழா சிறப்புற நடைபெற ஆசி கூறுகிறோம்.

மஹாராஜஸ்ரீ
சு.து. சண்முக நாதக்குருக்கள்

மாவை ஆதீனம்
மாவிட்டபுரம்

## இந்து கலாசார அமைச்சரின் ஆசியுரை



ஈழமணித் திருநாட்டின் வடபுலத்தில் அமைந்த சப்த தீவுகளில் காரைநகர் பல்வேறுவழிகளில் சிறப்புற்று விளங்குகிறது. சைவமும், தமிழும் ஒருங்கு சேர வளர்ந்து சிறப்புற்று விளங்கும் காரைநகர் மேற்கில் கருங்காலி போசுட்டிப் பதியில் கோவில் கொண்டருளி வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கி அருளாட்சி புரிந்து வருகிறார் முருகப் பெருமான். மிகப் புராதன சிறப்புக்களைக் கொண்ட இவ்வாலயத்தில் பிரமாண்டமான திருப்பணிகள் குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எனது இளமைக் காலத்தில் அடிக்கடி இவ்வாலயத்தில் வழிபடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. குறிப்பாக எனது தாயார் திருக்கார்த்திகை நாளன்று இவ்வாலயத்தில் மாவிளக்குப் போட்டு முருகனை வணங்கும் காட்சி எனது மனக் கண்ணில் தெரிகின்றது.

நெல் வயல்களின் முகப்பிலே அமைந்த அழகான சூழலில் பல விருட்சங்களின் மத்தியிலே திருக்குளம், இராஜகோபுரம், சித்திரத்தேர், தேர்முட்டியுடன் பொலிவாக வீற்றிருந்து என்றும் அழகனாகக் காட்சியளித்து அருள் புரியும் முருகனை நாம் அனைவரும் வணங்கி அருள் பெறுவோமாக. திருப்பணிகளை சிறப்புற முன்னெடுத்த திருப்பணிச்சபையினர், அறங்காவலர் ஆகியோரின் முயற்சிகளையும், கலைஞர்களின் கைவண்ணத்திறனையும் பாராட்டுகிறேன்.

கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்தும் அந்தண சிவாச்சாரியார்களையும் ஆலயப் பிரதம குருவையும் வணங்கி இம்மலருக்கு ஆசி கூறுவதில் பெரும் மகிழ்வடைகிறேன். அடியவர்கள் அனைவருக்கும் போசுட்டி முருகனின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலமெல்லாம்"

தி.மகேஸ்வரன்
இந்து கலாசார அமைச்சர்.

இந்து கலாசார அமைச்சு
கொழும்பு.

## ...பத் தலைவரின் ...திலிருந்து

...துடன் வாழ்க்கை நடத்துபவர்கள் என்று அறிஞர்கள் கூறுவர். ...ஆலயங்களுக்கு பெரும் பங்குண்டு. பல நூறு வருடங்களின் முன் ... சைவ அன்பர்கள் இங்கு முருக வழிபாட்டை ஆரம்பித்தனர். ...ப அறங்காவலரின் முன்னோர் இந்திய சிற்பாசாரிகளை அழைத்து ...ர். மூலஸ்தானம் இரட்டை பஞ்சாங்க அமைப்பைக் கொண்டது. ... நடைபெற்றுவருகிறது. காலப்போக்கில் திருக்குளம், சித்திரத்தேர், ...கமைய அமைக்கப்பட்டது.

...வேலாயுதப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு சிறப்பான பூசை ...க்கப்பட்ட சண்முகானந்த சபை விழாக் காலங்களில் தண்ணீர்ப்பந்தல் ...னம் செய்தல் போன்ற கைங்கரியங்களை மேற்கொண்டு ஆலய ...பாலகர்களே கோவிலுக்கண்மையில் வியாவில் சைவ வித்தியாசாலை ...ச்சிக்கும் ஆன்மீக ஈடேற்றத்திற்கும் வழிகோலினர். பாடசாலையில் ...ப ஏற்படுத்தியதன்பயனாக சிறந்த சமூகக் கட்டமைப்பு இக்கிராமத்தில்

...வம், வைகாசி விசாகம், மணவாளக் கோலம், கந்தசஷ்டி, சூரன் ...ற தினங்களில் விசேட அபிஷேகம், சுவாமி திருவீதியுலா வருதல் ...ணப்படனம் நடாத்திப் பயன் சொல்லுதல் இடம்பெறும். ஏராளமான ...பௌர்ணமி நாளில் தீர்த்தோற்சவம் இடம்பெறக்கூடிய வகையில் ...லப் பூசை கிரமமாக நடைபெற்றுவருகிறது. இவ்வாலயம் பலகாடு, ...ரு அமைப்பாகவும் செயற்பட்டுவருகிறது.

...கத்தினை நடாத்த முடியவில்லை. கடந்த வருடம் அமைக்கப்பட்ட ... அன்று பாலஸ்தாபனம் நிகழ்தியது. தொடர்ந்து பல அறிஞர்களிடம் ... பாரிய திருப்பணி வேலைகள் நிறைவேற முருகனின் திருவருள்

... 17ந் திகதியில் இருந்து கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி ...டைபெற திருவருள் கைகூடியதையிட்டு உள்ளம் பூரிப்படைகின்றது. ...ஷேகம் நடைபெறவுள்ளது.

...களில் இருந்தும், இங்கிலாந்து போன்ற மேலைத்தேய நாடுகளில் ...கும். இத்திருப்பணி வேலைகள் நிறைவுபெற பொருளுதவி, சரீர ... பணிவான நன்றிகள்.

...ம் போசுட்டி முருகனின் கும்பாபிஷேக நிகழ்வுகளைக் கண்டுகளித்து ...மானின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

ப.விக்னேஸ்வரன்
ஆலய திருப்பணிச் சபைத் தலைவர்

## அருட்கவியின் வாழ்த்துப்பா
## தமிழ் சிறக்க அருள்புரிவாய்



ஞானமுயர் சித்தர்பலர் ஆதிகாலம்
நற்றமிழால் பூசித்த வடிவேல் மூர்த்தி
வானவர்கள் வந்துவந்து ஜாமம் தோறும்
வழிபட்டு வரம் பெற்ற கந்த மூர்த்தி
தேனலரும் கடம்பினோடு சோலை வாவி
செந்நெல்வயல் சூழ்கோயில் அமர்ந்த மூர்த்தி
கானமணி யிசைக்காரை நகரில் மேவும்
கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி

கருங்காலிப் பதியமர்ந்த முருகா, உன்றன்
கனகபுதுக் கோயில்கட் டுவித்த மக்கள்
பெருங்கோலச் சீர்பொலியக் கட்டினோர்கள்
பேணுகுட முழுக்கிட்ட வேத நாவர்
வருங்காதல் மிகுதொண்டு பூண்ட சீலர்
வழிபடுவோர் வளம்செழிக்க, தொழில்செழிக்க
தருங்கீர்த்தி சந்தான சுகம்செழிக்க
தமிழ்சிறக்க அருள்புரிவாய் போற்றிபோற்றி

கவியோகி.அருட்கவி.
சீ.விநாசித்தம்பி M.A.

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துச் செய்தி



ஞாலம் நின் புகழே யாக வேண்டும் நான்மறைகள் ஏத்தும்
சீலமே ஆலவாயில் சிவபெருமானே என்றார்"

என்பது சிவநெறியின் பரப்பினை உணர்த்தும் அருள் வாக்காகும். இதற்கொப்ப எமது மண்ணின் திருக்கோயில்கள் இன்று எழுச்சி பெற்று வருவதை நாம் காணுகின்றோம்.

எங்கு பார்த்தாலும் குடமுழுக்கும் இரதத் திருப்பணியும் சிறப்புற்று விளங்குவது கண்கூடு காரைநகரிலும் அமைந்த அத்தனை திருக்கோயிலும் புனருத்தாரணம் செய்யப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்று வருகின்றன. கருங்காலி முருக மூர்த்தி கோயில் அற்புதமும் பழம் பெருமையும் வாய்ந்தது. இன்று மேலும் சிறப்பான திருப்பணிகளினால் புதுமை பெற்றுள்ளது வரவேற்கத்தக்கது. எனவே ஆலய அறங்காவலர்கள், பக்தர்கள், அந்தண சிரேட்டர் அனைவரையும் வணங்கி வாழ்த்தி குடமுழுக்கு விழா சிறக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை,

கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி

**மலரமைப்பு: ப.ஐங்கரன்**
**காரைநகர் செய்தியாளர்**

மகாலஷ்மி ஸ்ரோர்ஸ்
22, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

சிறிமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

சீமாட்டி புடவைக்கடல்
122, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்
கிளை
மங்கை சில்க்
நவீன சந்தை
15, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்

ஈஸ்வரன் ரேடர்ஸ்
69, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

# வடக்கில் விவசாய உற்பத்திக்குப் புத்துயிரூட்ட உலக உணவு ஸ்தாபனம் திட்டங்கள் வகுப்பு

(கொழும்பு)

வடபகுதியில் விவசாய உணவு உற்பத்திக்கு புத்துயிரளிக்கும் நோக்குடன் உலக உணவு விவசாய ஸ்தாபனம் பாரிய திட்டங்களை வகுத்துள்ளது.

இந்த வகையில், ஒரு கோடி 34 இலட்சம் டொலர் செலவில் 15 திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக உலக உணவு விவசாய ஸ்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு தசாப்தங்களாக இலங்கையில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக கிராமியபொருளாதாரம் உள்ளடங்கலாக விவசாய, கடற்றொழில் உற்பத்திகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனவென உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் ஆசியபதில் பிரதிநிதி ஆர். சி. பிங் தெரிவித்துள்ளார்.

இவ்வமைப்பின் பிரதிநிதிகள் அண்மையில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களிற்கு விஜயம் செய்து அங்கு மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து ஆராய்ந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைவாக, கடற்றொழில், நெல் உற்பத்தி, வீட்டுத்தோட்டம், கால்நடை அபிவிருத்தி போன்ற துறைகளிலும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## அவசர கலந்துரையாடல்

(செம்பியன்பற்று)

தொண்டர் ஆசிரியர்கள், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-42)

## மலையகத் தமிழரின் பிரச்சினைகள் இனம்காண ஆலோசனைச்சபை

(கொழும்பு)

இந்திய வம்சாவழித் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணவும் அவர்களுக்கான சமூக சேவைகளை மேற்பார்வை செய்யவும் என 14 கல்விமான்களை உள்ளடக்கிய ஆலோசனைச் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சபை மலையகத் தமிழ்ச் சமுதாயத்தில் அதிக கவனம் செலுத்தவுள்ளது. இந்தச் சபையில் அமைச்சர் சந்திரசேகரனும் அடங்குகின்றார். (உ-5)

**புலமைப்பரிசில் பெற்று**

# வெளிநாடு செல்லும் அதிபர்களின் வயதெல்லை 57 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அரச பாடசாலைஅதிபர்கள் புலமைப் பரிசில்பெற்று வெளிநாடுகளுக்குச் சென்று குறுகிய காலப் பயிற்சிகள் பெறுவது தொடர்பான நிபந்தனைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மனிதவள கல்வி, கலாசார அலுவல்கள்அமைச்சர் வீ.கே. நாணயக்கர்ரதெரிவித்துள்ளார்.

கடந்த இரு மாதங்களிற்கு முன்பு வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபத்தில் வெளிநாட்டுப் பயிற்சிபெறும் வயதெல்லை 50 என வரையறுக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போது மேற்படி வயதெல்லை 57 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதுவரை வெளிநாட்டு பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கத் தவறிய அதிபர்களை மனிதவள அபிவிருத்தி கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு அலுவலகம், மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை என்பவற்றில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19, 6)

## சமாதானசூழலில் அமெரிக்கா வர்த்தக உறவுகளை மேம்படுத்த முன் வருகை

(கொழும்பு)

இலங்கையில் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக நகர்வதையடுத்து அமெரிக்க முதலீட்டு வர்த்தகஉறவுகளை மேம்படுத்த முன் வந்துள்ளது.

நிறுவனங்கள் அல்லதுவேறு முயற்சிகள் மூலம் இரு வழி வர்த்தகத்தை அதிகரிப்பதற்கு இரண்டு நாடுகளும் முயற்சி செய்ய வேண்டுமென்று அமெரிக்கா சென்றுள்ள இலங்கை தூதரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

இலங்கையில்தாராளபொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படுவதாலும் படிப்பறிவு வீதம் அதிகமாக உள்ளதாலும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியத்தை அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளார்கள்.

இலங்கை ஆடை உற்பத்தி பொருள்ஏற்றுமதிமூலம்வெளிநாட்டு நாணய மாற்றில் 53 சதவீதத்தை பெற்று வருகின்றது, இதில் அமெரிக்கா 63 சதவீத ஆடைகளைகொள்வனவு செய்வது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## நல்லை ஆதீனத்தில் ஞானப்பால் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வருடந் தோறும் நடை பெற்றுவரும் ''ஞானப்பால் உற்சவம்'' கடந்த 19-ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. எதிர் வரும் 29 ஆம் திகதி வரை இந்த உற்சவம் நடைபெறும்.

தினமும் மாலை 5.00 மணிக்கு பூசை நடை பெற்று திருஞான சம்பந்த சுவாமிகளின் திருவுருவம் வீதியுலாவாக நல்லூர் சிவன் கோவிலுக்கு கொண்டு செல்லப் பெற்றுஅங்குசம்பந்தரின் அற்புதத் திருப்பதிகம் ஓதப்படும்.

நல்லை ஆதீன ஆரம் கால ஓதுவார் மூர்த்திகளில் ஒருவரும் அகில இலங்கைத் திருமுறை மன்ற அமைப்பாளருமான சி.கிருஷ்ண மூர்த்தி பதிகங்களை ஓதுவார். (செ)

## உடுப்பிட்டி பாடசாலை முன்னணியில்

(சுதுமலை)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கமும், விசேட படையணிகளும் இணைந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடத்தியஐந்துநாள் பயிற்சிப் பாசறை நிகழ்வில் மாணவர்களிற்கு இடையில் பலவித போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 16 பாடசாலைகளில் இருந்து324 மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

இப்போட்டிகளில் உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி 140புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும்,

யாழ். கனகரட்ணம்மத்திய மகாவித்தியாலயம் 130புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும்,

சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி 125 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும்,

நாவாந்துறை றோ.த.க. பாடசாலை 123 புள்ளிகளை பெற்று நான்காம் இடத்தையும்,

கொக்குவில்இந்துக் கல்லூரி 121 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இப் பாடசாலைகளிற்கான சுற்றுக்கேடயங்களையும், மற்றும் பரிசில்களையும் பாசறையின் இறுதிநாள் நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட இந்துசமய விவகாரங்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் வழங்கி கௌரவித்தார். (உ)

## 3 நிறுவனங்களுக்கு உள்ளூரில் விமான சேவை நடத்துவதற்கு அனுமதி

உள்ளூர் விமான சேவைகளை நடத்துவதற்கு மூன்று நிறுவனங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாக சிவில்விமானப்போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் பொருட்டுதிருகோணமலை சீனன்குடா விமான நிலையம், அநுராதபுரம், கொக்கல மற்றும் வீரவில விமான நிலையம் என்பன புனரமைக்கப்படவுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (த)

**பொருளாதாரத்தை விரிவுபடுத்த**

## இலங்கையும் இந்தியாவும் உறுதி பூண்டன

(கொழும்பு)

இலங்கையும் இந்தியாவும் தமது பொருளாதார வளங்களை மேலும் விரிவுபடுத்த உறுதி பூண்டுள்ளன.

இந்திய நிதியமைச்சர் ஜஸ்வந்சிங்க், இலங்கை பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மாறகொட ஆகியோர் அமெரிக்காவில் நடைபெற்றஉலகநிதியமைச்சர்கள் மாநாட்டில் சந்தித்த போதே இந்தஉறுதிப்பாட்டை மேற்கொண்டனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் நோக்குடன் திட்டமிடக்கூடிய வழி முறைகள் பற்றியும் இவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

இந்தியா இலங்கைக்கு ஏற்கனவே கடன் அடிப்படையில் 10 கோடி டொலர்களை வழங்கியிருந்தது. (உ-8)

## மேற்கிந்திய தீவு அணி இந்தியாவிடம் தோல்வி

(கொழும்பு)

மேற்கிந்திய தீவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும் மேற்கிந்திய தீவு அணிக்குமிடையிலான 2 வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்தியா 37 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா முதல் இனிங்ஸில் 339 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் டென்டுல்கர் 117 ஓட்டங்களையும், லக்ஸ்மன் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும், ராகுல் ராவிட் 67 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்திய அணி முதல் இனிங்ஸில் 245 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லாரா 52 ஓட்டங்களையும் விறால் கூப்பர் 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியாஅதன் 2வதுஇனிங்ஸில் 218 ஓட்டங்களை பெற்றது.

இதில் கங்குலி ஆட்ட மிழக்காமல் 75 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 74 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்திய தீவு அணி அதன் 2 வது இனிங்ஸில் 275 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சந்திர போல் ஆட்டமிழக்காமல்67 ஓட்டங்களைப் பெற்றார்.

இது 5 போட்டிகளைக் கொண்ட இத் தொடரில் இந்தியா முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## கிணற்றில் இருந்து இளம் பெண் சடலமாக மீட்பு

(மந்திகை)

வியாபாரி மூலை கௌரியம்மன் கோவிலடிக்கு அண்மையிலுள்ள கிணறு ஒன்றில் இருந்து இளம்பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆள் நடமாட்டம் குறைந்த இக் கிணற்றடியால் சென்ற ஒருவர் பொலிஸாருக்கு கொடுத்த தகவலின்பேரில் அண்மையில் நண்பகல் அப்பகுதிக்கு சென்ற பொலிஸார் சடலத்தினை மீட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைந்துள்ளனர்.

புலோலி மேற்கு பூவற்கரையை சேர்ந்த வேலன் பரமேஸ்வரி(வயது-26) என்ற திருமணமாகாத பெண்ணே சடலமாக மீட்கப்பட்டவர் என இனங்காணப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகபொலிஸ் வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (உ-23)

## வேட்டைக்குசென்ற வேளை துப்பாக்கிவேட்டுக்கு பலி

(கொழும்பு)

தம்பகல காட்டுப்பகுதியில் வேட்டைக்காகச் சென்ற 5 பேர் கொண்ட குழுவில் ஒருவர் அதேகுழுவைச் சேர்ந்த மற்றொருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

வேட்டையில் ஈடுபடும் போது குறிதவறியதாலேயே இந்த சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு துப்பாக்கிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (த)

**அங்கீகாரம் கிடைத்தும் அனுமதியில்லை**

# வட - கிழக்கில் 1000 தொண்டர் ஆசிரியர் நியமனங்கள் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கு மாகாணத்தில் 1000 தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் பிற்போடப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலாளர் க. சண்முகலிங்கம் மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்தவருடம் ஒக்ரோபர் 24 ஆம் திகதி அமைச்சரவை கூட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 1000 தொண்டர் ஆசிரியர்கள் சேவைக்கு உள்ளீர்க்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு அதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.


எனினும், இப்போது கல்விச்சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படி மேற்படி நியமனங்கள் ஒத்திப் போடப்பட்டுள்ளன.

கல்விச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்தவுடன் மேற்படி தொண்டர் ஆசிரியர்கள்சேவைக்குஉள்ளீர்க்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-19-6)


யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய
# மஹா கும்பாபிஷேக சிறப்புமலர்





ஆலயத்தின் முகப்புத்தோற்றம்



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

அம்பிகை அடியார்களே:

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் வீரமாகாளி அம்பாளுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகிறோம். பழமையும், பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் நல்லூரை ஆண்ட தமிழ், சைவ மன்னான சங்கிலிய மன்னனால் வழிபடபெற்று பல அருள் நிலைகளைப் பெற்றது வரலாற்று நிகழ்ச்சியாகும். நல்லூரிற்கு பல சிறப்புக்கள் அவற்றுள் பல ஆலயங்கள் அமைந்து மக்களின் ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழி சமைக்கும் நிலையில் உள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின் இவ்வாலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகம் இங்கு வாழும் மக்களுக்கும், ஊருக்கும் தனிச்சிறப்பை ஏற்படுத்துகின்றது. மூலமூர்த்தியாக வீரமாகாளியாக எழுந்தருளி இருந்தாலும் வேண்டுவார் வேண்டுவதைக் கொடுக்கின்ற தெய்வமாக வீற்றிருக்கின்றாள். இக்கும்பாபிஷேகத்தை நடாத்திவைக்கும் புனருத்தாரணக் குழுவினருக்கும் இவ்வூர் மக்களுக்கும் அம்பிகை அருள் கிடைப்பதாக. கும்பாபிஷேகத்தை எல்லோரும் தரிசித்து அம்பிகையின் அருளைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

## தேவஸ்தான தர்மகர்த்தாக்களின்ஆசியுரை

சிருஷ்டிகர்தரியாம் அன்னை வண்ணை வீரமாகாளி அம்பாளின் கும்பாபிஷேகப் பெருவிழா மிகவும் சிறப்புற ஆகம பூர்வமாக நடாத்தப் படுகின்றதான நிகழும் சித்திரபானு வருஷம் சித்திரைத் திங்கள் 12ம் நாளாகிய இச் சுபவேளை மிகவும் புனித நாளாகும். வாரலாற்றுப் பெருமை மிக்க இத் தலத்தில் வீற்றிருந்து ஆன்ம கோடிகளுக்கு அருளாட்சி புரியும் அம்பாள், இப்புனித கைங்கரியம் நிறைவேறுவதற்கு உறுதுணையாக விளங்கிய அனைவருக்கும், மற்றும் அனைத்து மக்களுக்கும், இஷ்டசித்திகளை நல்குவாளாக என அன்னையின் பாதார விந்தங்களை வேண்டுவதுடன் மிகுந்திருக்கும் திருத்தொண்டிற்கும் பரிபூரண ஒத்துழைப்பை நல்குமாறும் அனைவரையும் வேண்டி அமைகிறோம்.

சுபமஸ்த்து தேவஸ்தானம்

## கும்பாபிஷேக பிரதமகுருவின் ஆசிச் செய்தி

அகிலபுவன மாதாவாகிய அன்னை வண்ணார்பண்ணை பதியில் பல்லாண்டுகாலமாக வீரத்தாயாக வீற்றிருந்து ஆன்மகோடிகளுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை வீரமாகாளி அம்பாளுக்கு இன்று நடைபெறும் மகா கும்பாபிஷேகம் தாயாரின் பேரருளால் நடாத்தப்படுகின்றது. இக்குட முழுக்கு வைபவத்திற்கு சகல வழிகளிலும் பங்களித்த அன்னையின் மீளா அடியவர்களுக்கு வீரமாகாளி அன்னயைின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கிறோம். அத்துடன் எமது நாட்டில் நாம் எல்லோரும் ஒற்றுமையாகவும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டும் வாழ அன்னை அருள் வேண்டியும், எமது வீட்டிலும், நாட்டில் சாந்தி, சமாதானம் அமைதி கிடைக்க் சங்கிலி மன்னன் வழிபட்ட வீரத்தாயை நாமும் மனமாற பணிந்து எல்லோருக்கும் ஆசி கூறி அமைகிறோம்.

"ஸேகாசமஸ்தாசுகிலோபவந்து"

## இந்து கலாசார அமைச்சரின் ஆசிச் செய்தி

வரலாற்றுப் பெருமையும், சரித்திரப் பிரசித்தியும் ஒருங்கே பெற்றுத் திகழும் ஸ்ரீ அம்பாளுடைய கும்பாபிஷேகப் பெருவிழா ஆனது நிகழும் சித்திரபானு வருஷ சித்திரை 12ம் நாளான 25.04.2002 இல் நடைபெறுவதையிட்டு நான் மிகவும் மகிழ்வடைகிறேன். சங்கிலி மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டதும் ஆதியில் இருந்து சைவக் குருமார் பரம்பரையினரால் நித்திய, நைமித்திய கிரியைகள் செய்யப்பட்டுவருவதுமான இவ்வாலயத்தில் நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் சிறப்புடன் பூரணத்துவம் அடைந்து, அம்பாள் அருள் சகல பக்தகோடிகட்கெல்லாம் கிடைத்து வாழ்வாங்குவாழ எல்லாம் வல்ல அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சுபம்

தியாகராசா மகேஸ்வரன்
இந்து சமய கலாசார அமைச்சர்

## அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபைத் தலைவரின் ஆசிச்செய்தி

மூர்த்தி, கீர்த்தி, தலம், தலவிருக்ஷம், வரலாற்றுப் புகழ், இத்தியாதி விசேடங்களை எல்லாம் ஒருங்கே கொண்ட இப் புனித அம்பாள் ஆலயத்தில் நிகழும் சித்திரபானு வருஷ சித்திரைத் திங்கள் 12ம் நாளில் (25.04.2002) ஜோதிஷ ரீதியாக மிகவும் சிறப்புடன் அமைந்த ஹஸ்த்த நக்ஷத்திர சுபவேளையில் ஸ்ரீ கும்பாபிஷேகம் நிகழ இருப்பதை இட்டு நாம் மிகவும் மகிழ்வடைகிறோம். ஸ்ரீ ஆலயமானது சங்கிலி மன்னனால் தனது குல தெய்வமாகவும் வீர மாதாவாகவும் பூஜிக்கப்பட்டமை அனைவரும் அறிந்ததே. ஆதியில் இருந்து சைவக் குருமார் பரம்பரையினரால் நித்திய, நைமித்திய கிரியைகள் ஆகம பூர்வமாக அனுஷ்டிக்கப்படுவதும் மிகவும் சிறப்பும், பெருமையும் உடையதாகும். அதிலும் எமது அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையில் அங்கம் வகிக்கும் திறமையும், பக்தி பூர்வமான கிரியைகளில் வல்லவர்களுமான சிவாச்சரியர்களால் ஸ்ரீ கும்பாபிஷேகக் கிரியைகள் நடாத்தி வைக்கப்படுவதையிட்டு நாம் மிகவும் பெருமையும், மகிழ்வும் ஒருங்கே அடைகிறோம். எல்லாம் வல்ல வீரமாகாளி அம்பாள் அனைத்து ஜீவராசிகளுக்கும் இஷ்ட சித்திகளை வழங்கி அருள் புரிய வேண்டி, அன்னை திருப்பாதம் பணிந்து, வாழ்த்தி, ஆசி கூறி அமைகின்றோம்.

"சர்வஜனகா சுகினோபவந்து"
சுபமஸ்து

காயத்திரி மந்திரம்
ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் சவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ஜ தீமஹி
தியோ யோ நப் பிரஜோத ஜாத்

சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்கள்
தலைவர் அகில இலங்கை சைவக் குருமார்
அர்ச்சகர் சபை


| | | | |
|---|---|---|---|
| குபேரன் களஞ்சியம்<br>358 - 160, ஆஸ்பத்திரி வீதி<br>யாழ்ப்பாணம் | அலங்கார் நகை மாளிகை<br>21/7, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம் | வெங்கடேஸ்வரா<br>79, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம் | க.கனகசுந்தரம்<br>152, ஆஸ்பத்திரி வீதி<br>யாழ்ப்பாணம் |
| பகலோன் களஞ்சியம்<br>334, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம் | ஸ்ரீமாதவன்<br>97, கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம் | கே.கே.கந்தையாபிள்ளைஅன்சன்ஸ்<br>318,(124) ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம் | எஸ்.வீ.முருகேசு<br>154, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம் |

## மேற்குக் கரையில் 27 பலஸ்தீனர் கைது

(ஜெருசலேம்)
இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்குக்கரைப் பகுதிகளில் நேற்று முன்தினம் 27 பலஸ்தீனர்களைக் கைது செய்துள்ளனர்.

பயங்கரவாதச் சந்தேகநபர்கள் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக இவ்விருதரப்பினரும் தற்கொலை தாக்குதல் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் கைதுகள் என்பவற்றினை பரஸ்பரம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## விமான நிலையத்தில் 5 வயது சிறுமி கைது

(பொஹோரா)
கொலம்பியாவிலிருந்து விமானத்தில் பயணம்செய்த 5 வயது சிறுமிநியூயோர்க்கின் கெனடி விமானநிலையத்தில் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சிறுமி இரண்டு இறாத்தல்எடையுள்ள ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கைதுசெய்யப்பட்டுள்ளார் என நியூயோர்க்விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போதைப் பொருள்களை கடத்தும் முயற்சிகளிற்கு சிறுபராயத்தினரை பயன்படுத்துவது கண்டிக்கப்பட வேண்டியதுஎன அமெரிக்க சுங்கச் சேவை அலுவலகம் தெரிவித்துள்ளது.

போதைப்பொருள்களைக் கடத்தும் நிறுவனங்களும் உற்பத்தியாளர்களும் எந்தளவிற்கு நுணுக்கமாக செயற்படுகின்றன என்பதை இது எடுத்துக்காட்டுவதாகவும் அலுவலகம்தெரிவித்துள்ளது.

(உ-8)

### உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்பு

## வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்கள் ஊதியமின்றி தவிப்பு

(கொழும்பு)
வடக்கு -கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருப்பதால், வேட்பாளர்களான அரச ஊழியர்கள் கடமைக்கு செல்லாதிருப்பதுடன், மாதாந்தம் ஊழியம்பெறமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

பொதுவான அமைச்சின் ஆவண விதிகளின் படி அரச ஊழியர் ஒருவர் தேர்தலில் போட்டியிட வேட்புமனுதாக்கல் செய்தால் தேர்தல் முடியும் வரை சம்பளமற்ற விடுமுறையில் இருக்கவேண்டும்.

இதனால் நியமனப் பத்திரம் தாக்கல் செய்த நாளில் இருந்து, செப்ரெம்பர் 25 ஆம் திகதி வரை வேட்பாளர்களாக இருக்கும் அரச ஊழியர்கள் மாதாந்தம்வேதனத்தை பெற முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த மார்ச்மாதம் 20 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தல் செப்ரெம்பர் 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது தெரிந்ததே.

(உ-5)

## சமாதான முயற்சிகளில் சந்தேகம் கொள்வது இந்தியாவுக்கு நல்லதல்ல

### மேற்குலக இராஜதந்திரி கருத்து

(கொழும்பு)
இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் உண்மையானதாகவும் நேர்மையானதாகவும் இருக்கும் பட்சத்திலும்,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமது ஆயுதம் தாங்கிய போராட்டத்தைக் கைவிடும் பட்சத்திலும் இலங்கையின் சமாதான முயற்சிகள் விடயத்தில் இந்தியா சந்தேகங்களைக் கொண்டிருப்பது நல்லதல்ல.

சிரேஷ்ட மேற்குலக இராஜதந்திரி ஒருவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

பிரபாகரனை நாடுகடத்தக் கோரும் விடயம் முற்றிலும் வேறுபட்டதாகும்.

இவ்விவகாரத்தை இந்திய அரசு எவ்வாறு கையாள்கின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(உ)

## மனமொத்த....

கள் நிலைபெறப்பாடுபடுவோம்.

காட்டுமிராண்டிக்கும். நாகரிக யுவனுக்கும் உள்ள வேறுபாடு, அவனுடைய செல்வத்தாலோ சுகவாழ்வினாலோ அல்ல. அறிவு வளர்ச்சியில் அவனுக்குள்ள ஈடுபாடு அழகுணர்ச்சி, அன்புடைமை முதலியவற்றால் தான். எல்லாச்சந்தர்ப்பங்களிலும் பலாத்காரம் கூடாது என்பது கருத்தல்ல. பலாத்காரத்தைப் பிரயோகிப்பதா அல்லது தீமைக்கு அடிபணிவதா என்ற நிலைமை ஏற்படும் போது பலாத்காரத்தைப் பிரயோகிப்பதே சிறந்தது ஆகும். வாழ்க்கை என்பது முழுமையான ஒன்று. அரசியல் முன்னேற்றத்தையும், சமூகச் சீர்திருத்ததையும் பிரிக்கமுடியாது. வாழ்க்கையைப் பிரிவுகளாக வகுக்கமுடியும்.

நமது சொல், செயல், செல்வம், ஆகியவற்றில் மனித இனத்துக்கு நன்மை செய்வதையேவாழ்வின் குறிக்கோளாக ஆசிரியரும் மாணவரும் கொள்ளவேண்டும். பொதுவாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அதைக்கவர்ச்சி மிக்க பலன்கள் கிட்டும் வாழ்க்கையாகக் கருதக்கூடாது. சமயத்தையும் வகுப்பையும் கவனிக்கிறோமே யொழிய நல்லொழுக்கத்தையும் திறமையையும் கவனிப்பதாய்த் தெரியவில்லை. இதுவே ஒழுங்கின்மைக்கு காரணமாக அமையும்.

சாதிவகுப்புப் பிரிவினைகளால் கோடிக்கணக்கானவர் வறுமையில் ஆழ்ந்துகிடக்க வேண்டியதாயிற்று. இது தான் சாதி, வகுப்புத் துவேஷத்தை வளர்த்துப்பலர் சம்பாதிப்பதற்குக் காரணம். இந்தவறுமையை நீக்கி வாழ்க்கைத்தரத்தை உயர்த்தினால் இப்படிப் பிழைப்பு நடத்துபவர்கள் எண்ணிக்கை நிச்சயம் குறையும். இன்புற்றுவாழும் சமுதாயமே, மனிதவளர்ச்சியின் முடிவான குறிக்கோள். நமது சமூகத்தில் நிலவிவரும் குறைபாடுகளை நீக்கவேண்டுமெனில், நாம் எல்லோரும் ஒருகுலம் என்கிற உணர்வு ஏற்படவேண்டும்.

நாட்டுக்கு உள்ளும், புறமும் ஆபத்துச் சூழும்தருணத்தில் தேவைப்படுவது நல்ல மனோதிடமுள்ள ஆடவரும் மகளிருமே, கட்டுப்பாடான முயற்சியினாலும் கடுமையான உழைப்பினாலும் மனிதன் உண்மையை எய்தமுடியும். ஒவ்வொருவரும் தனது சொந்த நலனைப் பொருட்படுத்தாமல் நாட்டுநலனும், சமுதாய முன்னேற்றமுமே பெரிதெனக் கருதிப் பாடுபட வேண்டும். பெரிய இலட்சியங்கள் இருந்தால் மட்டும் போதாது, அவற்றை அடைய நாம் உழைத்தாக வேண்டும். காலம் அருமையிலும் அருமையானது. முன்னெப் பொழுதையும்விட உலகம் இப்போது நெருங்கிய பிணைப்புக் கொண்டிருக்கிறது. சட்ட நியாயத்தின்படி தகராறுகள் தீர்வதை நாம் உறுதிசெய்ய வேண்டும்.

அமைதிக்குஉழைப்பதேஉலகுக்கு நாம்செய்யும் கடமையாகும். சமாதான முழக்கங்களை வெறுமனே கூறிக் கொண்டிராமல் அமைதிக்காகத் தீவிரமாகப் பாடுபட்டால் தான் வருங்கால உலகம் பாதுகாக்கப்படும், சமாதானத்தை நிலை நாட்ட நாம் விரும்பினால் சமாதானத்திற்கு அடிப்படைத் தேவைகளான அக ஒற்றுமையைக் காத்து, ஆன்ம நிறைவும், இன் சுவையும் போற்றி வளர்க்க வேண்டும். போர் நடத்துவதில் பெருமையில்லை. பூசல் அகன்று மனமொத்த சமரசம் செய்வதில் தான் பெருமை. அச்சம், சந்தேகம், பொறுமையின்மை, தப்பெண்ணம் ஆகியவை நிலவும். தற்போதைய சூழ் நிலை மாற வேண்டும். சாசனத்தில் கொள்கைகளையும், இலட்சியங்களையும் கடைப் பிடிப்பதன் மூலமாகத்தான் நாம் இதைச் சாதிக்க முடியும்.

வெறும் கோஷங்கள் போட்டாலும் ஆசைகளை வளர்த்துக் கொண்டாலும் மட்டும் போதாது. ஆனால் கடுமையான உழைப்பு, மற்றவர்களை மனிதர்களாக மதிக்கும் தன்மை முதலியவற்றால்நாம் உயர முயல வேண்டும். ஆண்கள் குணத்தில் மிருகத்தனமும், குழந்தைத்தனமும் இருக்கின்றன. இந்த மிருகத்தனத்தைக் குறைத்து குழந்தைத் தனத்திற்கும் பயிற்சி அளிப்பது தான்பெண்களின் கடமை. நம்முடைய பழக்க வழக்கங்கள் ஒழுங்காக இல்லாததால் நமக்குப் பேராசை ஏற்படுகிறது. பிறரைக் கவிழ்க்க நாம் விரும்புகிறோம். இந்தகைய பேராசைக்கு வரம்பே இல்லை.

### திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த

## மூவினக் கலைஞர்களும் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)
திருமறைக்கலா மன்றத்தின் கலைப்பாலம்-2002நிகழ்வுகள் தென் பகுதியில் முடித்துவிட்டு இன்று மூவினக் கலைஞர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளார்கள்.

'நாம்அனைவரும்ஒரே குடும்பம்' என்னும் பெயரிடப்பட்ட இந்தக் கலைப்பால நிகழ்வுகளைச் சிறப்பிக்க யாழ்ப்பாண திருமறைக் கலா மன்றத்திற்குவருகைதரும்அனைத்துத் திருமறைக் கலா மன்றத்தைச்சார்ந்தவர்களும் நாளை றுதினம் சனிக்கிழமை யாழ் திருமறைக்கலா மன்றத்தில் கலைநிகழ்வுகளை நடத்தவுள்ளனர்.

கலை நிகழ்வுகளின் சிறப்பம்சமாக கலை. வழியினூடாக சமாதானத்தை நோக்கிய பயணத்தில் 'தரிசனம்' என்னும் வார்த்தைகள் அற்ற நாடகம் மாலை 6.45 மணிக்கு இடம் பெறவுள்ளது.

(உ-6)

## சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவிலடியில் உள்ள மணிவண்ணன் என்பவரது வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த பெண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஒன்று கடந்த திங்களன்று பட்டப் பகல் வேளையில் திருடப்பட்டுள்ளது.

(உ)

## வழக்குகளை மறுபரிசீலனை செய்க

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக்காலத்தில் காணாமல் போனோர் தொடர்பாக பொலிஸார்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை மறுபரிசீலனை செய்யுமாறு பொலிஸ் அதிகாரிகள் சிலர் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவை கேட்டுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பும், பொலிஸ் சேவையும் குழப்பமாக இருந்த சூழ்நிலையிலே நாங்கள் சேவை புரிந்ததாக அவர் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-8)

## தலைமைத்துவப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில்போரூட் நிறுவனத்தினால் சுகாதாரத் தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பயிற்சி பெறவிரும்பும் சுகாதாரத் தொண்டர், முன்பள்ளி ஆசிரியர்கள் ஊர்காவற்றுறையில் உள்ள போரூட் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

(உ-75)

## நூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)
யாழ், மாவட்டத்தில் இயங்கும் தொழிற்துறைத்திணைக்களத்திற்குச் சொந்தமான நெசவு நிலையங்களுக்கான நூல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கக் கட்டிடத்தில் வைத்து விநியோகம் செய்யப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட நெசவு நிலைய பொறுப்பாசிரியர்கள் நூலைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## தேவரதம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)
நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுக்கிடையிலான போக்குவரத்தில் ஈடுபட்ட தேவரதம் படகு விரைவாகப் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபை அறிவித்துள்ளது.

(உ-75)

## சக்தியைத் தாருமையா

சுன்னாகம் சந்திரசேகரப்பிள்ளையார் தேர்த்திருவிழாவை ஒட்டிய கீர்த்தனை.

இராகம்: மாயாமாளவ கெளளை தாளம்: ஆதி

பல்லவி

சுன்னாகப் பதியுறை சந்திரசேகரரே-வேகும்
எம்மனத் தாபம் தீருமையா!

அநு பல்லவி

தும்பிக்கையாலே ஒளவைக்கு அன்றருள் செய்நாய்
நம்பிக்கையாலே உன்னை நாடிவந்தோமே

சரணம்

அரசடியில் இருந்து ஆறுதல் தந்திடுவார்
அடியார்க்கு அருள்செய்யும் ஆனைமுகந்தானே
வெவ்வினை அறுத்திடும் வல்லபை கணபதியே
தொல்வினை தீர்த்தெமக்கு நல்வழிகாட்டிடுவாய்

சகத்திற்கு நாயகனே சக்தி கணபதியே
சமாதானம் நிலைபெறவே சக்தியைத் தாருமையா
தேரேறி வந்தெமக்கு தேறுதல் தந்திடுவாய்
சீரேறு சுன்னாகத்துறை சந்திரசேகரரே

குகதாசசர்மா சிவகுமார்
மயிலணி

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.
-குறள்

வலம்புரி

## ஜனாதிபதியின் இந்திய பயணம்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்த நாடு தலையிட்டு சமரசம் செய்ய முனைந்தாலும் இந்தியாவின் பங்களிப்பு மிக மிக அவசியம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. இதனை நிரூபிக்கும் வகையில் சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வே நாடு சமாதான முயற்சியின் விடயங்களை உடனுக்குடன் இந்தியாவுக்குத் தெரியப்படுத்தி வருகிறது. அத்தோடு ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதமராக ரணில் பதவியேற்ற கையோடு பயணம் செய்த முதல் நாடு இந்தியாவே.

விடுதலைப் புலிகளுடனான தனது சமாதான முயற்சிக்கு இந்தியாவின் ஆசி வேண்டியே பிரதமர் ரணில் அங்கு சென்றிருந்தார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், சமாதான முயற்சியில் இந்தியா வெறுப்பைக் காட்டுமாயின் அதன் தாக்கம் பாரதூரமாக இருக்குமென்பது அரசியல் தலைவர்கள் அறிந்து கொண்ட உண்மை.

இந்நிலையிலேயே சமாதானப் பேச்சுக்களை இந்தியாவில் வைத்துக்கொள்வது நல்லதென்றும் கருதப்பட்டது. சமாதானப் பேச்சுவார்த்தையை இந்தியாவில் நடத்துவதற்கு மத்திய அரசு அனுமதிக்காததிலிருந்து இந்தியாவின் உணர்வு எத்தகையதென்பதை உணர முடிகிறது.

இவை ஒருபுறத்தில் நோக்குதற்குரியது. மறுபுறத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்வதற்கு இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்பதில் விடாப்பிடியாக நிற்கிறார்.

இத்தகையதோர் நிலையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்தியா சென்றிருப்பது நல்ல சகுனமாகத் தெரியவில்லை.

ஏனெனில் ஜனாதிபதியின் இந்திய விஜயம், இந்திய அரசின் நிலைப்பாடு இவை இரண்டும் இணைகின்ற போது சமாதான முயற்சிக்கு அட்டமத்துப் பார்வையாகவும் அமைந்துவிடலாம்.

# வேல்தாங்கி மெய்மறந்து ஆனந்தக்கூத்தாடி

# அடியவர்க்குப் பரவசமூட்டிய வேல்சாமியார்

### மறைந்தார் மாண்பு

வேல்சாமியார் என்று அடியவர்களால் அன்போடு அழைக்கப்பட்ட அமரர் தம்பையா செல்லத்துரை, புங்குடுதீவு தந்த நற்புத்திரர்களில் ஒருவர். இறை பணிக்காக தன்னை அர்ப்பணித்த ஒரு சைவப் பெரியார். மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த இல்லற ஞானியே வேல்சாமியார்.

புங்குடுதீவு 2ஆம்வட்டாரத்தில் வாழ்ந்த தம்பையா நாகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனாக 5.6.1929 ல் பிறந்த அமரர் கல்வியை ஓரளவு முடித்தபின் கடைகளில் கணக்காளராகவும் பின்துறைமுகக் கூட்டுத்தாபனத்திலும் கடமை யாற்றினார். நாகரட்ணம் என்ற அம்மையாரை திருமணம் செய்து நன்மக்கட்பேறு பெற்ற இல்லறத்தானாய் வாழ்ந்தார்.

#### தெய்விகப் பணி

நயினை நல்லூர்ப்பஜனைப் பாதயாத்திரையில் தன்னை இணைத்துக்கொண்டு ஆண்டுதோறும் தனது பங்களிப்பை நிறைவாகச் செய்து வந்தார். இவரின் தமைபனார் சதானந்த சுவாமிகள் ஆரம்பகாலத்தில் எடுத்த வேலினை இவரிடம் கையளித்து ஆண்டுதோறும் தொடர்ந்து இத்திருத்தொண்டை செய்துவர வேண்டும் என்று விடுத்த வேண்டுகோளை ஏற்று இத்தெய்வீகப் பணியை தொடர்ந்து செய்துவந்தார்.

#### வேல் சாமியார்

ஆத்மஜோதி நா. முத்தையா ம. நமசிவாய தேசிகர் போன்ற ஆத்மீக வள்ளல்களின் அரவணைப்பில் தனது தெய்வீகப் பணியை தொடர்ந்து செய்து வந்தார். நயினை நல்லூர் பஜனைப் பாத யாத்திரையில் வேல் எடுத்து வந்த காரணத்தினால் இவரின் தெய்வீகத் தொண்டை வலுவுள்ள தாக்க அமரர் ம. நமசிவாய தேசிகர் அவர்களால் வேல் சாமியார் என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டது. அன்றுமுதல் வேல் சாமியார் என்ற பெயர் இவரோடு ஒன்றாகிவிட்டது. நல்லூர் வீதியில் முருக நாம பஜனைத் தாளத்திற்கேற்ப வேலைத்தூக்கி மெய்மறந்து ஆனந்தக் கூத்தாடும் காட்சி அனைவரையும் ஆனந்த பாவசத்தில் ஆழ்த்தும். 'வேலைத் தூக்கிநின்றாடும் தெய்வம்' என்று யோகர் சுவாமிகள் சொன்ன நற்சிந்தனையை நம்சிந்தையில் இருந்தும், தளாத வயதிலும் தன்னை மறந்து வேலைத்தூக்கி ஆடுகின்ற ஆனந்தக் கூத்தை நல்லூர்க்கந்தன் தேர்பவனியில் காணுகின்ற தெய்வீகமான ஆனந்தக்காட்சியெனலாம்.

இடம்பெயர்ந்த காலத்தில் வன்னியில் பல ஆலயங்களில் பஜனை வழிபாடுகளை நடத்தி மக்களை நன்நெறிப்படுத்திய நன்நெறியாளர். தனது வாழ்க்கைத் துணைவியாருடன் சேர்ந்து வெளிநாடுகள் சிலவற்றிற்குச் சென்று வந்துள்ளார். சப்ததீவு திவ்ய ஜீவன சங்க சமாசத்தின் உபதலைவராக இருந்து, அடியவர்கள் அனைவரையும் அன்பால் அரவணைத்துச் சென்றார். அருள் வழிகாட்டியான வேல்சாமியார் ''மைவரும் கண்டத்தர் மைந்த கந்தாவென்று வாழ்த்து மிந்தக் கைவரும் தொண்டன்றி மற்றொன்றறியேன்'' என்றவாறு வாழ்ந்து பயந்த தனி வழிக்குது ணைவடிவேலுமசெங்கோடன மயூரமுமே என்ற அலங்காரத்தமிழின் அருள்வாற்கிற்கமைய 23.3.2001 இல் பங்குனி அபரபக்கசதுர்த்சி திதியில கந்தன் கழலடியில் ஒன்றியது அவரது ஆன்மா இவரின் இல்லறத்து துணைவி பாரும் சிலமாத இடைவெளியின் பின் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே என்றவாறு தனது தலைவன் தாளினை பற்றிவிட்டாள். இருவரின் ஆன்மாவும் கந்தன் கழலடியில் ஒன்றிவிட்டன.

ஓம் சாந்தி

நயினை

**நா. கோபாலகிருஷ்ணன்**

# மனமொத்த சமரசம் ஏற்பட வழிவகுத்தாலே

# வருங்கால சமுதாயம் பாதுகாக்கப்படும்

பகுத்தறிவுக்கேற்ற அறவழியில் அமைந்த மதத்தினை ஏற்றுக் கொள்வதே விவேகம். நாம் ஒருவரையொருவர் ஒதுக்குவதைப் போதிக்கும் மதங்கள் இன்று உலகத்தில் ஏராளமாக இருக்கின்றன. ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி நேசிக்கவேண்டும் என்பதைப் போன்ற மதங்கள் போதிய அளவு இல்லை. நான்கு பேர் அமர்ந்து சீட்டாடுகிறோம். அவரவர்களுக்கு விழுகிற சீட்டு இருக்கிறதே அது விதி. விழுந்த சீட்டை எப்படி ஆடுகிறோம் என்பது தான் மதி!. கல்வி சரியான முறையில் வளர தார்மிகக் கோட்பாடு அவசியம் சர்வகலாசாலைகள் விஞ்ஞானப் பயிற்சி அளிக்கலாம் ஆனால், அறிவுடன் ஞானத்தையும் அளிக்கவேண்டும்.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதே கல்வியின் நோக்கம் என்று கருதுவது தவறு. வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம். அறிவும், திறமையும் பெறுவதுமட்டுமல்ல கல்வியின் நோக்கம். பிறருடன் ஒத்துவாழ நம்மைப் பக்குவப் படுத்துவதே அதன் முக்கிய நோக்கம். கருணை கொள்ளாமல் கல்வியறிவு மட்டும் பெற்றால் நம்மைப் பேய்க்குணமே பிடித்தாட்டும் என்றவாசகத்தின் உண்மையை மனதிற் கொள்ள வேண்டும். கனிவடையவும் சுதந்திரத்தில் வளர்ச்சி காணவும் அன்பிலும், அறத்திலும் மலர்ச்சி அடையவும், அறிவிலும் நற்பண்பிலும் ஓங்கவும். சமூக சாத்திரங்களில் பயிற்சி நமக்குத் துணை செய்யும்.

ஒழுங்கீனம் அல்லது கீழ்ப்படியாமை என்பது ஜனநாயகத்திற்கும், சமுதாய சீரமைப்பிற்கும் நேர்விரோதமானது. தங்களது செயல்களின் விளைவுகளை சமுதாயத்தை எவ்வாறு பாதிக்கக் கூடும் என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். ஆசிரியர் மாணவரிடையே உறவு திருந்தினால் கல்விச் சாலைகளின் நிலை அபிவிருத்தி அடையும். மாணவர்களிடையே சேவை உணர்ச்சி, கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பது ஆசிரியர்களின் கடமையாகும். பழைய கருத்துக்களையே பண்ணிப் பண்ணிக் கூறி மந்தப் போக்கை வளர்க்கும் நல்ல நூல்கள் இருப்பதைப் போன்று வாசகர்களின் சிந்தனையைக் கிளறிவிட்டு ஆழ்ந்து சிந்திக்கும் பண்பை வளர்க்கும் கெட்ட புத்தகங்களும் உண்டு.

சினிமாப் படங்கள் தேசிய நோக்குக் கொண்டதாயும், நாட்டில் ஒழுங்கையும், ஐக்கியத்தையும் வளர்ப்பதன மூலமும் நமது நாட்டு மக்களின் மனோநிலையை உயர்த்துவதாகவும் இருக்க வேண்டும். உலகிலுள்ள எல்லா உயிர்களிலும் மனிதன் ஒருவன் தான் கருணை காட்டிக் கஷ்டம் தாங்கித் தியாகம் செய்யும் ஆற்றல் உடையவன். மனம் குறுகியதாகவும் நெஞ்சம் கல்லாகவும் இருந்தால் சுதந்திரம் இல்லை என்றே பொருள். சமுதாயத்துடன் ஒன்றுபடாத எந்தமனிதனும் முழுமை பெற்றவனாக ஆகமாட்டான். வேற்றுமை பாராட்டாமல் மனிதருக்கு உழைக்கும் உணர்ச்சி உள்ளத்தில் உதிக்காத வரையில் இரைதேடி இனம் பெருக்கி உண்டுறங்கி வாழ்கிற மனித மிருகங்களே நாம்.

பிறரிடத்து அன்பும், சகிப்புத் தன்மையும் காட்ட வேண்டுமேயன்றி பழிவாங்கும் போக்குக் கூடாது. மனிதர்களை இழிவாக நடத்த நாம் முற்பட்டால், பகுத்தறிவும், கருணையும் நம்மிடம் இல்லையென்றால் மத அனுஷ்டானத்தால் மட்டும் கடவுளைத் திருப்திப்படுத்தி விடுவதாக மனப்பால் குடித்தால், நம்மை மட்டுமல்ல, கடவுளையே அவமதிப்பவர்களாகிறோம். பாலத்காரம் அனைத்தும் மனிதனுடைய தோல்வியின் சின்னங்களே. இந்த அணுகுண்டு சகாப்தத்தில் பொறுப்புள்ள மனிதர்களாக அமைதி, நட்பு, படைகுறைப்புக் கொள்கை

10 ம் பக்கம்பார்க்கவும்

**டாக்டர் இராதாகிருஷ்ணன்**

## சாயி அருளமுதம்



புலன் விழிப் பொருட்கள் மீதும், புலன்வழி இன்பங்கள் எனப்படும் விஷய வாசனாக்கள் மீதும்கொண்டுள்ள பேராசையை அகற்ற முடியா திருப்பதனாலேயே மனிதன் இன்னலுறுகிறான். தான் உழைப்பவற்றையும், சேகரிப்பவற்றையும என்றோ ஒரு நாள் கைவிட்டுச் செல்ல வேண்டுமென்பதை அவன் அறிவான். ஆயினும் காலம் செல்லச் செல்ல அவனுடைய பற்றுக்கள் குறைவதற்குப் பதிலாக மேலும் மேலும் கூடிக் கொண்டே போகின்றன.

ஒவ்வொருமனிதனும் மரணிக்கும் போது தன்னுடன் ஒருபிடி மண்ணை எடுத்துச் செல்லக் கூடுமானால் இங்கு ஒன்றுமே மிச்சமிருக்காது. அத்துடன் தலைக்கு இத்தனை அவுன்ஸ் எனக்களி மண்ணைப் பகிர்ந்தளிக்க நேரிடும்.

- நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை பணிமனை

### திறப்பு விழா

வடமராட்சி பிரதேசத்திற்கான அரசியல்துறை பணிமனை எதிர்வரும் 26.04.2002 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வல்வெட்டித்துறை வேம்படியில் மங்களகரமாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அனைத்து பொதுமக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வடமராட்சி வடக்கு சமாசம்

---

காரைநகர் - கருங்காலி போசுட்டி ஸ்ரீமுருகமூர்த்தி தேவஸ்தான மஹா கும்பாபிஷேக தினமான இன்று அனைவரும் அருளாசி பெற்று உய்ய பிரார்த்திக்கின்றோம்.

## மது கல்வி நிறுவனம்

டச்சு வீதி, கோப்பாய்.

தரம் 3 முதல் O/L வரையான வகுப்புக்கள் சிறந்த ஒழுங்கமைப்புடன் திறமை வாய்ந்த முன்னணி ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகிறது.

செயற்பாட்டறையில் மழலைச் செல்வங்களுக்கான பாலர் கல்வியும் போதிக்கப்படுகிறது.

O/L பகல் நேர வகுப்புகள் பாடசாலை வசதிகளுடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இன்னமும் சொற்ப அனுமதிகள் வழங்கப்படும்.


நீங்கள் கல்வியில் உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள உங்கள் பாலம்

## மது கல்வி நிறுவனம்

---

## தந்தை செல்வா நினைவுநாள்
# நிகழ்ச்சிகள்

## நாளை 26.04.2002 வெள்ளிக்கிழமை



### நினைவு ஆராதனை

காலை 8மணிக்கு யாழ் கிறிஸ்தவ ஒன்றிய அனுசரணையில் சுண்டுக்குளி பரியோவான் தேவாலயத்தில் நன்றி ஆராதனை நடை பெறும்.



### நினைவு அஞ்சலி

நேரம்: காலை 9.00மணி

இடம்: யாழ் நகர் தந்தை செல்வா சதுக்கத்தில் உள்ள நினைவிடம் மலரஞ்சலியும் நினைவுரைகளும் இடம் பெறும்

### நினைவுப் பேருரை

தலைமை : பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் (துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம்)

நேரம் : பி.ப. 3 மணி

இடம் : கைலாசபதி கலையரங்கம் யாழ் பல்கலைக்கழகம்

### நிகழ்ச்சி நிரல்

நினைவுப் பேருரை : பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் (கல்வித்துறை யாழ் பல்கலைக்கழகம்)

தலைப்பு : "இலங்கையில் ஆசிரிய வாண்மை"

கலை நிகழ்ச்சிகள் : இராமநாதன் நுண்கலைப் பீட மாணவிகள்
இசை மாலை
நாட்டியாஞ்சலி

*அனைவரையும் திரண்டுவந்து தந்தைக்கு அஞ்சலி செலுத்தி நினைவு கூர அன்புடன் அழைக்கிறோம்.*

*யாழ்ப்பாணம்.* (5016)

தந்தை செல்வா
*நினைவு அறங்காவல் குழு*

---

## மரண அறிவித்தல்

### திருமதி. வள்ளியம்மை கைலாசபிள்ளை

(மண்டைதீவு)

மண்டைதீவைச் சேர்ந்த முன்னாள் கிராமசபைத் தலைவர் (சேமன்) கைலாசபிள்ளையின் அன்பு மனைவி வள்ளியம்மை காலமாகி விட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மாலை 3.00 மணிக்கு சுதுமலையில் உள்ள இல்லத்தில் நடைபெறும்.

C/O:- அருட்பிரகாசம் ஆசிரியர்
மா.பி.என்.மில் ஒழுங்கை
சுதுமலை அம்மன் கோவிலடி
சுதுமலை.

தகவல்
கை.விக்னேஸ்வரன் (விக்னா)
மகன்

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்/ பல்கலைக்கழக மருத்துவபீட உடற் கூற்றுத்துறையில் பதவி நிலை தொழில் நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும்

**திரு. இராமலிங்கம்-குலேந்திரன் அவர்களின்**

பாசமிகு தந்தையார்

### நாகர் இராமலிங்கம்

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்திற்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின்ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உடற்கூற்றுத் துறையினர்
மருத்துவபீடம்
யாழ் பல்கலைக்கழகம்

(5020)

---

### இன்று தேர்

தாவடி வட பத்திர காளி ஆலய தேர்த் திருவிழா இன்றும் தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறவுள்ளது.

### ஆலோசகர் அன்ரன்...

இன்றுடன் முடிவடைந்த தையிட்டே அவர் தனது குடும்பத்துடன் மாலைதீவு சென்று அங்கிருந்து இலண்டனுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இவர்களை அழைத்துச் செல்வதற்காக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரி நேற்று கிளிநொச்சிக்கு சென்றிருந்தார்.

அவர்கள் அனைவரையும் விடுதலைப் புலிகளின் அரசியல்த் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வழியனுப்பி வைத்தார்.(த)

---





மில்க்வைற் சோப் இண்டஸ்றியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541




அண்ணா தொழிலகம், இணுவில்

லாலாவின் தயாரிப்பு

சண்சயின் சோப்

சில ஆண்டுகளுக்கு முன் வெளிமாவட்டங்களில் கூடுதலாக விற்பனை செய்து நற் பெயர் பெற்றது

சண்சயின் சோப்
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி
[C/4003]


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
கலைப்பீடம் முகாமைத்துவ வணிக பீடம்
இரண்டாம் மொழி ஆங்கிலம்
மீள் பரீட்சைகள் - 2002

எதிர்வரும் *29. 04. 2002, 30. 04. 2002, 02. 05. 2002* ஆகிய திகதிகளில் நடாத்தப்படவிருந்த மேற்படி **ESL Level I, Level II, Level III** பரீட்சைகள் முறையே *06. 05. 2002, 08. 05,2002, 11. 05. 2002* திகதிகளுக்கு (காலை 9.30 – 12.30 மணி) பிற் போடப்பட்டுள்ளது. மாணவர்கள் இவ் அறிவித்தலை கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

பதிவாளர்


கணனி மூலம்
CD RECORDING
140/=
BLANK CD இலவசம்
150 பாடல்கள் அடங்கிய
MP-3 CD-190/=
அபிநயா மல்ரி எலெக்ரோனிக்ஸ்
யாழ் வீதி சந்தையடி மானிப்பாய்
[C/4002]

ராஜா
(யாழ்ப்பாணம்)
2வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30, 5.30
[C/3953]


---



### தாவடி தெற்கு ஸ்ரீ வட பத்திர காளி அம்பாள் தேவஸ்தானம்
## வருடாந்த மஹோற்சவம் 2002

I. **இரதோற்சவம்** *25.04.2002 இன்று*

*(தேர்த்திருவிழா) வியாழக்கிழமை*

*விசேட மேளக்கச்சேரிகளுடன் அடியார்கள் புடை சூழ அம்பாள் முற்பகல் 10.00 மணிக்கு தேரில் ஆரோகணித்து அருட்காட்சி கொடுப்பாள்.*

*(நண்பகல் விஷேட அன்னதானம் இடம் பெறும்)*

II. **தீர்த்தோற்சவம்** *26.04.2002 நாளை*

*(சித்திரா பௌர்ணமி தினம்) வெள்ளிக்கிழமை*

*காலை 1008 சங்காபிஷேகத்துடன் உற்சவம் ஆரம்பமாகிவிசேட மேளச்கச்சேரிகளுடன் நண்பகல் 11.30க்கு மேல் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.*

*(விசேட அன்னதானமும் இடம்பெறும்.)*

*மாலை 5.00 மணிக்கு கொடி இறக்கும் நிகழ்ச்சி இடம்பெறும்*

கண்ணன் ஐயர் ரவி ஐயர்
ஆதீனகர்த்தாக்கள்

(C/4010)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.